# பாரிமலைக் கொடி

கவிஞர் கண்ணதாசன்



வானதி பதிப்பகம்

# பாரிமலைக் கொடி

## 1

நாலு ஆள் உயரத்தில் இருந்துதான் அந்தச்
சுனையில் இருந்து தண்ணீர் விழுந்தது. ஆனால்
தேன் கலந்த அந்தத் தண்ணீரில் குளிப்பது மட்டு
மின்றி அதைக் குடிப்பதிலும் சுகம் இருந்தது. சுற்றி
லும் வானோங்கிய மரங்கள். கதிரவன் ஒளி புக
முடியாமல் இளம் காற்று மெல்லத் தாலாட்டிக்
கொண்டிருக்கும் அந்த இடம், பறம்பு மலையின்
பாங்கான பகுதிகளில் ஒன்று

மனது களிக்க. மயங்கிக் குளிக்க மங்கையர்
கூடுவது அந்த இடத்திலேதான். மாவடிச்
சுனையைத் தெரியாத மங்கையர்கள் பறம்பு மலை
யிலே இல்லை. பறம்பு மலையின் முன்னூறு கிராமங்
களில் இருந்தும் மாவடிச் சுனைக்கு வராத பருவ
மங்கையர் இல்லை.

அடவி சூழ்ந்த இடமாதலின் ஆடையின்றிக்
குளிப்பதற்கு ஏற்ற பகுதி அது. ஆடையின்றிக்
குளிப்பார்கள் ஆரணங்குகள் என்பதாலே, ஆடவர்
கள் அங்கே வருவதும் இல்லை.

அங்கவையின் தோள்களைப் பிடித்துக் கொண்டு
சங்கவை நீரில் ஆடினாள்.

மார்பகத்தைச் சேர்த்து முழங்கால்வரை கட்டிய
ஒரு முண்டு, மெதுவாக இளகிக் கொடுத்து, மார்

பகத்துக் கால்வாய் வழியாக தண்ணீர் ஓடி உடம் பெங்கும் வியாபித்தது.

அந்தக் குளிர்ச்சியும், அந்த சுகமும் அங்கவை யும், சங்கவையும் தினமும் சுவைக்கும் இனிமைகளே.

சோழ நாட்டுக்குப் போனபோது காவிரியில் ஆடி இருக்கிறார்கள் இருவரும். ஆனால், மாவடிச் சுனையின் இனிமை காவிரியில் இல்லை.

சலசலவென்று தலையில் தண்ணீர் விழுந்து உடம்பெங்கும் ஓடுகின்ற சுகத்தை, காவிரி நங்கை எப்படித் தர முடியும்!

காதல் மணவாளன் கட்டித் தழுவுதல் போல் ஓர் ஆனந்தத்தையல்லவா பருவ மங்கையர் அந்தச் சுனையிலே கண்டு களித்திருக்கிறார்கள்.

குளிக்கப் போகும் அங்கவையும், சங்கவையும் அங்கேயே அலங்காரம் செய்து கொண்டு திரும்பு வது வழக்கம். அன்றும் அவர்கள் அலங்காரம் செய்து கொண்டிருந்த போது அவசரமாக ஓடி வந்தாள் ஒரு தோழி.

வேல்கம்பை பூமியில் சொருகி மண்டியிட்டு வணங்கினாள். வேறொன்றுமில்லை, மன்னவர் சோழ மண்டலம் செல்கிறாராம். மக்கள் இருவரை யும் அழைத்தேக விரும்புகிறாராம்.

அங்கவையும், சங்கவையும் அரண்மனைக்குள் நுழைந்த போது, வள்ளல் பாரி பயணத்துக்குத் தயாராக இருந்தான்.



"நேற்று வரைக்கும் அந்தத் திட்டமில்லையே. ஏனப்பா அவசரப் பயணம்?" என்று கேட்டாள், அங்கவை.

"ஆண்டு தோறும் ஆடிப் பெருக்கு வருகிறது மகளே. ஆயினும் நம்மை அழைத்ததே இல்லை சோழ மன்னவர். யாது பற்றியோ இன்று காலையில் அழைப்பு விடுத்து மாலைக்குள் வரும்படி கோரி யுள்ளார்" என்றார் பாரி.

சங்கவை சிரித்தாள். "எங்கு யாது நடப்பினும் என் தந்தைக்கு இல்லாத அழைப்பா?" என்ற கேள்வி அந்தச் சிரிப்பில் இருந்தது.

மன்னனும் மக்களும் புறப்படத் தயாரானபோது பொன்னே விளையும் பறம்பு மலையின் புகழ்பெற்ற தளபதி வானவரையன் நேர்ப்பட்டான்.

"அழைத்ததாகப் பணியாள் சொன்னான்."

"ஆம். ஒரு செய்தி! சோழ மண்டலப் பெருங்கோ நம்மை ஆடிப் பெருக்கு விழாவுக்கு அழைத்திருக்கிறார்."

"இறைமாட்சிப் பேரரசே! நாளை பறம்பு மலைக்குத் தாங்கள் முடிசூடிய இருபத்தைந்தாவது ஆண்டு. இதுவரை நாம் எந்த ஆண்டிலும் மலைக்கு வெளியே இருந்தது இல்லையே...?"

"ஆயின் என்ன செய்வது...? அழைத்தார். அழைப்பை மறுத்தால் அதை ஆணவம் என்பார்கள்!

ஆண்டும் விலகிச் செல்லாது; ஆடிப்பெருக்கும் விலகிச் செல்லாது. இரண்டில் எதுவெனச் சீர் தூக்கிப் பார்த்தால், இன்னொருவர் அழைப்பை ஏற்பதே உயர் தன்மை!”

“நல்லது மன்னவா; நானும் வருகிறேன். ஆனால் முடிசூடிய ஆண்டு விழாவை நாம் திரும்பி வந்து கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்து விட்டு வருகிறேன்” என்று கூறி விடைபெற்றுக் கொண்டான் வானவரையன்.

## 2

காவிரி பொங்கிப் பாயும் சோழ மண்டலம். திரும்பிய பக்கமெல்லாம் செந்நெல். அரும்பிய முல்லைப் பூக்கள். ஆனந்த மயிலாடும் நந்த வனங்கள்; ஆலமரங்கள். காணக் காணத் தெவிட்டாத அழகுக் காட்சிகள்.

அந்தச் சோழ மண்டலத்துக்குள்ளே மன்னவன் பாரியின் தேர் ஊர்ந்தது. பாரி, பாரி மகளிர், தளபதி வானவரையன் ஆகியோர் அதிலே வீற்றிருந்தனர்.

மன்னவன் சோழ மண்டலம் ஆயினும் வந்தவன் பாரி என்பதாலே அம் மண்டலம் முழுமையும் தலை தாழ்ந்து அவர்களை வணங்கிற்று.

“வள்ளல் பாரி வாழ்க” என்ற முழக்கம் எங்கணும் எழுந்தது. உள்ளத்தால் பொய்யாது, உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் இருந்த மாமன்னன் பாரி அனைவரையும் தானும் தாழ்ந்து வணங்கினான்.

“இதோ அவனே பாரி! இவனே பாரி” என்று மக்கள் நெருக்கியடித்துக் கொண்டு அவரைப் பார்க்க விரைந்தனர்.

மாடகூடங்களிலும், மரக்கிளைகளிலும் பெருங் கூட்டம் மொய்த்துக் கிடந்தது. அவர்கள் தேரைத் தொட்டு வணங்குவாரும், சீரைப் பாடி வணங்கு வாரும் கணக்கில் அடங்கிலர்.

கோழியூர் எனப்படும் உறந்தை நகரில் வழக்க மான திருவிழா, காலம் கடந்துதான் வரும்; அன்று பாரி வந்தமையால் ஒரு திருவிழாவே நிகழ்ந்தது போல் காட்சியளித்தது.

ஆங்காங்கு நின்று கொண்டிருந்த படைவீரர் களின் புரவிகள் எல்லாம், அவர்களைப் பின் தொடர்ந்து ஓட ஆரம்பித்தன.

இவ்வளவு மாபெரிய வரவேற்பு சோழ மண்டலம் எங்கணும் வள்ளல் பாரிக்குக் கிடைத்தது என்பது சோழ மன்னன் கண்டராதித்தனுக்கு எட்டிற்று. அரண்மனையின் நாற் சுவர்களுக்கு நடுவில் அந்த வேங்கை கம்பீரமாக உலாவிக் கொண்டிருந்தது. வருவோர் எல்லாம் பாரிக்கு வாழ்த்துரைத்து செய்தி கொணர்ந்தனர். சோழ மன்னனுக்கு இது ஏற்கனவே அலுத்துப் போன ஒன்றுதான்.

பாடுகின்ற நாவெல்லாம் பாரியின் புகழையே பாடுவதையும், பேசுகின்ற நாவெல்லாம் அவன் புகழையே பேசுவதையும் கேட்டுக் கேட்டு அலுத் தவன் தான் சோழ மன்னன். சோழ மன்னன் மட்டுமா! சேர மண்டலத்தான், பாண்டிய மண்டலத் தான் அனைவருமே இதில் அலுப்புற்று இருந்த வர்கள் தான். ஆயினும், தனது நாட்டுக்கு விருந்தாளி யாக வந்துள்ள ஒருவனை, தான் சிறப்பிக்க வேண்டும்



என்ற முறையிலே அவனை எதிர்கொண்டு அழைக்கத் தயாரானான், சோழமன்னன் கண்டராதித்தன்.

வாயில் காப்போர் சுறுசுறுப்பு அடைந்தனர். படை வீரர்கள் நடைபாவாடை விரித்தனர். "வரு கிறது பாரியின் தேர், வருகிறது பாரியின் தேர்" என்ற முழக்கம் எங்கும் எழுந்துகொண்டே இருந்தது.

"உறந்தை நகர் முழுவதும் பாரியின் பக்கம் திரும்பிவிட்டதோ, பாரி படை இல்லாமலே வென்று விட்டானோ" என்ற ஐயம்கூட சோழ மன்னனுக்கு எழுந்தது.

பாரியின் தேர் வாயிலைக் கடந்து கோட்டை மதிலின் உள்ளே நுழையும்போது அந்த வாயி லிலேயே அவனை வரவேற்க சோழ மன்னன் வந் திருந்தான். இது மரபு இல்லைதான்! ஆயினும் பாரி யின் உயர் தன்மையை ஒப்பிட்டுப் பார்க்குங்கால் சோழ மன்னன் அல்ல; உலகத்துப் பேரரசர்கள் அனைவரும் வந்து வரவேற்க வேண்டியவர்களே என்றுதான் கூடி இருந்த மக்களுக்குத் தோன்றிற்று.

அரண்மனை நிலா முற்றத்தில் அரசவை விருந்து. நூற்றுக்கணக்கான அமைச்சர்கள், அவைத் தலைவர்கள் அனைவரும் கூடி இருந்தார்கள். எண் பேராயமும், ஐம்பெரும் குழுவும் அங்கே தவறாமல் வந்திருந்தன. வேறு வேலைகள் காரணமாக வெளியூர் சென்று இருந்தவர்கள் கூட பாரி மன்னன் வருகிறான் என்று கேட்டு ஊர் திரும்பி இருந்தார்கள்.

பாரி மன்னனைக் காணவேண்டும். அவன் பாதம் தொட்டுப் பணியவேண்டும் என்று வந்திருந்த பருவ மங்கையரும், வயதான மாதரும் மிக அதிகமாக இருந்தனர்.

இந்த நெரிசலுக்கு இடையில் சோழ மன்னனின் தோற்றம் மிகச் சிறியதாகவே இருந்தது அந்தச் சிறிய தோற்றத்தையும் தாங்கிக் கொள்ள வேண்டியவனாகவே சோழ மன்னன் இருந்தான்.

நிலா முற்றத்தில் விருந்தினர் மட்டுமின்றி, வெளியில் இருந்தும் வந்த பெருந்தனக்காரர்கள் கூட பெருமளவு கூடி இருந்தார்கள். அவர்கள் அனைவரும் “வள்ளல் பாரி வாழ்க! வள்ளல் பாரி வாழ்க!” என்று முழக்கமிட்டார்கள்.

விருந்தின் முன்னம் எழுந்து பாடத் தொடங்கினான், ஒரு புலவன். “மாரி பொய்த்து விட்டது சோழ மண்டலத்திலே என்று நாம் வருந்தினோம். மாரி பொய்ப்பினும் என்ன, பாரி உள்ளவரை வாரி வழங்குவான்” என்றவன் பாடினான்.

“பாரி, பாரி, பாரி! இதுதானா எங்கு பார்த்தாலும் பேச்சு?” — சோழ மன்னன் மனது கசந்தே இருந்தது. ஆயினும் சம்பிரதாயங்களுக்காக, ஒப்பு மரபுகளுக்காக அவன் சற்று அமைதியாகவே இருந்தான்.

விருந்திலே அங்கவையும், சங்கவையும் அழகான ஒரு தமிழ்ப் பாடலைப் பாடினார்கள்.



அந்தத் தமிழ்ப் பாடலுக்கு ஏற்ப சோழ மண்டலத்து நடனகுமாரி ஒருத்தி நாட்டியம் ஆடினாள்.

“அங்கவை, சங்கவை என்று இரண்டுபெண்கள் தங்களுக்கு உண்டு என்பது எனக்குத் தெரியும். அவர்கள் இவ்வளவு அழகாகப் பாடுவார்கள் என்பதனை இன்றுதான் நான் கேட்டேன்” என்றான் சோழ மன்னன்.

“பாடல் என்பது தமிழ் கற்றுத் தந்த ஒரு கலைதான். உவகையில் பாடலும் ஒன்று என்பதனை நாம் நன்றாக அறிவோம். அந்தப் பாடலை என் மக்களும் பயின்று கொள்ள வேண்டும் என்ற ஆசையிலேதான் பயிற்றுவித்தேன். அவர்கள் எங்கும் போய் பாடிப்பிழைக்க வேண்டிய அவசியம் இதுவரையிலே நேர்ந்தது இல்லை. அப்படி ஒன்று நேருமானால் அதற்கு அவர்கள் கூச்சப்பட, வெட்கப் படத் தேவை இல்லை என்பதற்காகவே இதனை அவர்களுக்குக் கற்றுத் தந்தேன்!” என்றான் பாரி.

“பாரியின் மக்களுக்கு அந்த நிலைமை நேருமா? நேராது. அஞ்ச வேண்டிய அவசியமே இல்லையே!” என்றான் சோழ மன்னன்.

“இல்லை. யாருக்கு எது நேரும் என்பது இயற்கை மட்டுமே அறிந்த ஒன்றாகும். இறை உணர்வு உள்ளவர்களுக்குக்கூட தங்களுக்கு என்ன வரப்போகிறது என்பதை உணர்ந்து கொள்ளக் கூடிய சக்தி கிடையாது. ஆகவே எது நேரினும் அதைத் தாங்கிக் கொள்ளக் கூடிய ஆற்றலைப்

பெண்மக்கள் பெற்றிருக்க வேண்டும் என்றுதான் அவர்களுக்குப் பயிற்றுவித்தேன்'' என்றான் பாரி.

''நல்லது. இன்னும் இரண்டு நாட்கள் இங்கே தங்கி நீங்கள் ஆடிப் பெருக்கில் மூழ்கி எழுந்து பிறகு தான் போக வேண்டும்'' என்று உண்மையிலேயே கேட்டுக் கொண்டான், சோழமன்னன்.

பாரிமீது அவனுக்கு அன்பும் ஏற்பட்டது. நாட்டு மக்கள் பக்தி செலுத்துகிறார்களே என்பதால் அதை மதிக்க பெருந்தன்மையும் ஏற்பட்டது.

''இருந்தே போகிறேன். இந்த விருந்தையும், இந்த மகளுடைய அற்புதமான அன்பையும் கண்ட பிறகு இங்கேயே இருந்து விடலாமா என்று கூட எனக்குத் தோன்றுகிறது. ஆயினும் நாட்டுக்கான கடமைகளும் இருப்பதால்தான் திரும்பிச் செல்ல வேண்டியவனாக இருக்கிறேன். மன்னன் என்ற முறையிலே அல்லாது வணிகன் என்ற முறை யிலேயானால் நான் இங்கேயே தங்கிவிடுவதில் பெரும் உற்சாகமடைவேன்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான், பாரி.

''நல்லது. தங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இடம், அமைதியான ஒரு சூழ்நிலையில் காவிரிக் கரையிலேயே அமைந்து உள்ளது. அங்கேயே தாங்கள் தங்கலாம்'' என்றான் சோழ மன்னன்.

''மிக்க நன்றி'' என்று அவர்கள் விடை பெறும் போது, ''தளபதி'' என்றழைத்தான் சோழன்.



உடனே தளபதி செங்கணான் அங்கே வந்து நின்றான். வந்து நின்ற தளபதி செங்கணான், மன்னன் உத்தரவிடும் முன்னரே அவர்கள் தங்க விருக்கும் அந்த மண்டபத்தை வருணிக்கத் தொடங்கினான்.

''காவிரியின் சலசல சத்தம், நாணல் காடுகளுக்குள்ளே முயல்களும், மான்களும் ஓடுகின்ற அரவம், தென்றல் காற்றின் இனிய ஓசை, இவற்றைத் தவிர வேறு ஓசையே இல்லாத இடம் அந்த இடம். அதிலே அற்புதமான கருங்கற்களால் கட்டப்பட்டது அந்த மண்டபம். சற்று நேரம் அங்கு சாய்ந்திருந்தால்கூட நாள் முழுதும் தூங்கலாமா என்று தோன்றும். இவ்வளவு கலையழகு படைத்த மண்டபத்தை மன்னவர் தங்களுக்காகவே கட்டியுள்ளார். தாங்கள் அங்கே தான் தங்க இருக்கின்றீர்கள். தங்களுக்கு பணிவிடை செய்வதற்காக நாங்கள் வேறு தோழியரை நியமிக்கவில்லை. என்னுடைய உடன் பிறந்த சகோதரியே தங்களுக்கும், தங்களுடைய மக்களுக்கும் துணையாக இருந்து வருவாள்'' என்றான் அவன்.

''மிகவும் நலமே. அவரது பெயர்!'' என்று கேட்டாள் அங்கவை.

''கதலி'' என்றான் செங்கணான்.

''ஓ, கதலி. அது தான் தேய்ந்து பிறருக்கு உதவுகிறது. தன் அங்கம் முழுவதையும் பிறருக்கு

உடைமையாக்குவது இந்த கதலி என்கின்ற வாழை ஒன்றே. அதையே பெயராகக் கொண்ட தங்க ளுடைய உடன் பிறந்தாளை நாங்கள் எங்கள் கூடவே வைத்துக் கொள்வதில் பெருமை அடை கிறோம்'' என்றாள் சங்கவை.

''அவள் நன்றாக தாயம் ஆடுவாள். கற்பனை யில் பாடல்கள் இயற்றுவாள். தங்களுக்குப் பொழுது போவதே தெரியாது'' என்றான் செங்கணான்.

"அப்படியே ஆகுக! பறம்பு மண்டலத்தில் நாங்கள் இயற்கையையே தோழிகளாகக் கொண் டிருக்கிறோம்! அங்கே எங்களுக்கு பொழுதுபோவது தெரியாது. அந்த இயற்கை மவுனமாகவே எங்களை அணைத்து அன்புகாட்டி, தாலாட்டுப் பாடுகிறது. ஆனால் தங்கள் உடன் பிறந்தாள் அதனைவிட உயர்ந்தவள் என்பதனை எங்களால் உணர முடிகிறது. எவ்வளவு விரைவில் அவளை அனுப்ப முடியுமோ அவ்வளவு விரைவில் கொண்டு வந்து சேருங்கள்'' என்றாள் அங்கவை.

சோழ மன்னன் சிரித்தான். "பெண்களுக்கு பேச்சுக்கு ஆள் இருந்தால் போதுமே! வாழ்க்கை முழுவதையும் அந்த சுவையிலேயே கழித்து விடுவார்களே'' என்றான்.



"தமிழ்த் திறமை உள்ள தோழியர் குறைவாய் உள்ள சூழ்நிலையில் வளர்ந்தவர்கள் அல்லவா! அதனால் சோழ மண்டலத்து தோழியை அவர்கள் பெரிதும் நேசிக்கிறார்கள்'' என்றான் வள்ளல் பாரி.

"ம்! எனக்கு ஒரு மகள் இருந்தால், அவளையே அனுப்பி இருப்பேன். ஆனால் இல்லை! இல்லாதது குறை இல்லை. கதலியை நான் என் மகளாகவே வளர்த்து வந்திருக்கிறேன். அவளை மணம் முடித்துக் கொடுப்பதும் என்னுடைய கடமையாகவே கொண்டு இருக்கிறேன். உங்களோடு அவளை தங்க வைப்பதில் நான் பெருமிதம் அடைகிறேன்'' என்றான் சோழன்.

"நாம் புறப்படலாமா'' என்றான் செங்கணான்.

"ம்! விரைந்து புறப்படுங்கள்! அங்கே விளக்கு களிலே ஏதேனும் குறையிருந்தாலும் வேறு விதமான வசதிகளில் ஏதேனும் குறையிருந்தாலும் எனக்கு உடனே அறிவியுங்கள். செங்கணான்! நீ நள்ளிரவு வரை அவர்கள் கூட இருந்து விட்டு, பிறகு விடை பெறலாம்! முதல் நாள் அல்லவா!'', என்றான் சோழன்.

வள்ளல் பாரியும் பிறரும் அங்கு நிற்கும் வரை சுற்றி நின்றவர்கள் யாவருமே அவ்விடத்தை விட்டு அசையவில்லை. அவர்கள் அனைவருமே வள்ளல் பாரியை இமை கொட்டாது பார்த்துக் கொண்டிருந் தார்கள். வள்ளல் பாரி தேரில் ஏறிய பிறகுதான் அந்தக் கூட்டம் கலைந்தது.

அது வெறும் கூட்டமாகவா கலைந்தது? ஆர வாரத்தோடு பாடல்கள் பாடி, 'வாழிய பாரி' என்று முழங்கியவாறே கலைந்தது. அந்தக் கூட்டத் தின் ஆரவாரத்தையும் உற்சாகத்தையும் கண்டு சோழ மன்னன் அப்போதைக்கு ஆத்திரம் அடைய வில்லை.

ஆனால், யாரும் ஆத்திரம் அடையக் கூடிய சூழ்நிலை இதுதான் என்று, ஏனோ அவனுக்குத் தோன்றிற்று.

# 3

ஆடி பதினேழு!

காவிரிக் கன்னி கரைபுரண்டு நடனமாடும் இரவு நேரம்! கரையிலே சூந்தங் கம்புகளால் ஆன விளக்கு களின் ஒளி! நூற்றுக்கணக்கான அந்த விளக்கு களின் நடுவிலே ஓர் அழகிய மண்டபம்! கருங்கற் களால் ஆன அந்த மண்டபம், அந்த சூந்தங்கம்பு விளக்கொளியால் மேலும் அழகு பெற்றது. சுற்றிலும் நின்ற மரங்கள் அந்த வெளிச்சத்தில் நன்றாகத் தெரிந்தன. காவலுக்கு நின்ற புரவிகளின் கனைப்பு இடையிடையே கேட்டுக் கொண்டே இருந்தது. முன்னும் பின்னும் நூற்றுக் கணக்கான வேல் தாங்கிய வீரர்கள் நடந்து கொண்டே இருந்தார்கள். அவர்கள் யாவரும் பாரி மன்னன் காவலுக்கு வந்தவர்கள்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய அமைப்பு எனினும் பார்ப்பதற்கு அழகான அமைப்பாக இருந்த அந்த மாளிகை மண்டபத்திற்குள்ளே, பாரியும் பாரி மகளிரும் தளபதி வானவரையனும் வந்தபோது "இம் மண்டபம் தங்களுடைய தகுதிக்கு மிகவும் குறைவு தான். என்றாலும், எங்களுடைய சோழ மன்னர் தங்கள் திருவடிகளே முதலில் பட வேண்டும் என்பதற்காகக் கட்டுவித்ததாகும்" என்றான் செங்கணான்.

"நீங்கள் சற்று அளவிற்குப் பெரிய வார்த்தை யைப் பயன்படுத்துகிறீர்கள். மாமன்னர் சோழ

மன்னரோடு ஒப்பிடும் போது நான் மிகவும் சிறிய வனே ! ஒரு மலைக்கும் முன்னூறு கிராமங்களுக்கும் அதிபதியாக உள்ள எனக்கு இவ்வளவு பெரிய மாபெரும் வரவேற்பினை அளித்தது தங்கள் மாமன்ன ருடைய பெரும் இதயத்தைக் காட்டுகிறது ! இது எனக்காகவே கட்டப்பட்டிருக்குமாயின் என்னைப் படைத்த இறைவன் நன்றிக்குரியவனாவான். வேறு எதை நான் சொல்ல முடியும்'' என்றான் வள்ளல் பாரி.

"அப்பா ! சோழ மன்னர் தங்களிடம் வைத்துள்ள அளவற்ற அன்பு இதுவரையிலும் நான் யாரிடமும் காணாத ஒன்று'' என்றாள் அங்கவை.

"ஆமாம், மகளே! சிலர் மட்டுமே சில இதயங் களைப் புரிந்து கொள்கிறார்கள். என்னைப் புரிந்து கொண்டதில் சோழ மன்னர் ஒருவராக இருப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன் ! ஏனோ மற்றவர்கள் சிலர் என் மீது ஆத்திர உணர்ச்சியோடு இருக்கிறார் கள். நான் கொடுப்பதும் நான் புகழ் பெறுவதும், அவர்களுக்குப் பிடிக்கவில்லை யென்றால், அவர்களை அமைதிப்படுத்துவதற்காவது என் னுடைய கொடைத் திறனை நான் குறைத்துக் கொள்ளக் கூடும்! அதிலே, தவறு ஒன்றும் இல்லை. ஆனால், சோழ மன்னருடைய இதயத்தைக் கணக்கிடும் போது மற்றவர்களும் இப்படி இருக்கக் கூடாதா என்றே எனக்குத் தோன்றுகிறது'' என்றான் பாரி.

"சோழ மன்னர் மற்றவர்களை விட சற்று உயர்ந்தவர் ! அவர் எதனையும் பெரும் கண்ணோட் டத்தோடு பார்க்கிறார் ! தங்களுடைய மகத்தான



புகழைக் கேள்விப்பட்டு உற்சாகம் அடைந்தவர் களிலே அவர் ஒருவர் ஆவார். அவரை நான் மட்டுமே அறிவேன்'' என்றான் செங்கணான்.

மேலும் அவர்கள் பேசிக் கொண்டே இருந்த போது, செங்கணான் இடைமறித்து, "நல்லது, தங்களுக்கு காலம் தாழ்கிறது நான் என் சகோதரியை அழைத்துக் கொண்டு வருகிறேன்'' என்று புரவியில் ஏறிப் புறப்பட்டான்.

அவனைப் பார்த்துக் கொண்டேயிருந்த அங்கவையும் சங்கவையும், "அப்பா! சோழ நாட்டில் தளபதிகள் கூட எவ்வளவு பக்தி வயப்பட்டு இருக் கிறார்கள் பார்த்தீர்களா ?'' என்றார்கள்.

உடனே பாரி, "ஆமாம், மகளே ! மனிதர்களுக் காகவே படைக்கப்பட்டது மண்டலமென்றாலும், மனிதர்களில் சிலரைத் தான் ஆங்காங்கே என்னால் காண முடிகின்றது'' என்றான்.

மாளிகைத் தூண்களைத் தட்டிப் பார்த்துக் கொண்டே வந்தாள் அங்கவை. அதற்கேற்ப இசை யெழுப்பிக் கொண்டே வந்தாள் சங்கவை ! இரு வரும் அந்த மாளிகை முழுவதையும், மண்டபம் முழு வதையும் சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்தார்கள்.

பறம்பு நாட்டில் அவ்வளவு அழகான மண்டபம் இல்லை தான் ! அம்மலையின் மீது நீண்ட நெடுங் காலமாகவே இருந்து வந்த தன் மூதாதையர்களின் மாளிகையில்தான் அவர்கள் குடியிருந்து வந்தார்கள். மூதாதையர் கட்டியதை அழிக்கக்கூடாது,

அத்தகைய சின்னங்கள் வாழவேண்டும் என்பதிலே பாரி மன்னன் அக்கறையுடையவனாக இருந்தான்.

நீண்ட வளைவுகளை உடைய மிகப்பெரிய மாடங்கள் பாரியினுடைய பறம்புமலை மாளிகையிலே இருந்தன. இங்கே இருப்பது போன்ற கருங்கல் மண்டபங்கள் அங்கே இல்லை. அவன் அரண்மனையில் சிங்காதனம் போடுகின்ற மேடை மட்டுமே கருங்கல்லால் ஆனதாக இருந்தது. ஆயினும் பறம்பு மலையைச் சுற்றி, ஏராளமான கருங்கற்கள் கிடைத்தன. தன்னுடைய மாளிகையைப் பெரிது படுத்துவதைவிட அதில் மிஞ்சுகின்ற பொருளைக் கொண்டு, மற்றவர்களை வாழவைக்க வேண்டும் என்றேதான் அவன் இருந்தான்.

ஆனால் சோழன், பாரியைவிட பொருள் தரத்தில் மிகவும் உயர்ந்தவன். சோழ நாடு பறம்பு மலையை விட மிகவும் பரந்தது. அதனால் அவன் கட்டிய மாளிகையும் பறம்பு மலை மாளிகையை விட மிகப் பெரியதாக அமைந்திருந்தது. அவ்வளவுதான் பாரிக்குத் தோன்றிற்று. ஆனால் அவனது மகளிருக்கோ, அப்பா ஏன் இப்படிச் சிறிய மாளிகையிலேயே, பறம்பிலேயே வாழ்ந்து வருகிறார், இப்படி ஒன்றை எழுப்பினால் என்ன என்று தோன்றிற்று.

அந்த மாளிகையின் அழகை அவர்கள் ரசித்துக் கொண்டேயிருக்கும் பொழுது, இத்தகைய மாளிகையில் இப்படிப்பட்ட பெண்ணல்லவோ இருக்க வேண்டும் என்பது போல வந்து சேர்ந்தாள் கதலி!

கதலி உள்ளே வரும்பொழுது பாரியும் வரவேற்கவில்லை. அங்கவை, சங்கவையும் வரவேற்கவில்லை. அமைதியாக சாய்ந்து கையைக் கட்டிக்கொண்டிருந்த வானவரையனே வரவேற்றான். வானவரையன் மட்டுமே "வாருங்கள்" என்றான். அவள் கண்ணாலே பதில் சொன்னாள்!



அவளை அழைத்துக் கொண்டு வந்த செங்கணான், "இவர்தான் பறம்பு மலையின் தளபதி" என்று வானவரையனை அவளுக்கு அறிமுகப் படுத்தி வைத்தான். "மிக்க நல்லது! நன்றி!" என்று ஒரு வார்த்தையுடன் உள்ளே சென்றாள் கதலி.

உள்ளே, அவள் நடந்து வருகின்ற பேரழகைப் பார்த்தபடியே அங்கவையும் சங்கவையும் நின்று கொண்டிருந்தார்கள்.

நெல்லையே சுருட்டி விட்டிருந்த நீண்ட நெடுங் கூந்தல்! நேர் வகிடு! நிலவையே வடிவெடுத்து வைத்திருந்தது போல் திருவதனம்! உற்றுப் பார்த்தால் கற்றவரும் மெய்மறக்கும் அழகான நாசி! வெள்ளி அம்பலத்துக் கைப்பிடி போன்ற அழகிய செவிகள். உரித்து வைத்த வாழைத் தண்டைப் போன்ற பொன்னால் அலங்கரித்த கழுத்து; தோன்றியும் தோன்றாமலும் இருக்கும் அழகான இளம் மார்பகம்; அதனைப் பிறர் காண முடியாதவாறு மறைத்துக் கொண்டிருக்கும் துல்லிய பட்டாடை.

இவளைப் பார்த்தே கவிஞன் எழுதினானோ என்று அறுதியிட்டுச் சொல்லுமாறு இடை; இப்படி நடந்தால் எப்படி உலகம் மயங்காமல் இருக்கும் என்பது போன்ற நடை; பொழுது விடியும்போது தோன்றும் கலகலப்போடு பளபளப்புடன் விளங்கும் அங்கங்கள்.

மனித குலத்தைப் பழி வாங்குவதற்கு என்றே இறைவன் பூமிக்கு அனுப்பிய தூது அவள்.

ஆம்! அங்கவை, அப்படித்தான் நினைத்தாள். பெண்மையிலே இப்படிப்பட்ட பேரழகு பறம்பு மலையில் இல்லை.

உறுதி வாய்ந்த உடற்கட்டு உள்ள பெண்கள் பறம்பு மலையில் ஏராளம்! ஆனால், இந்த அழகு தனி. இது என்ன சோழ மண்டலத்திற்கு இறைவன் அளித்த வரமா?

அங்கவையும் சங்கவையும் பெண்கள் பார்ப்பது போல் அவளைப் பார்க்கவில்லை. காதல் வயப்பட்ட ஆடவர்கள் பார்ப்பதுபோல் அல்லவா பார்த்தார்கள்!

அவளை நேருக்கு நேர் பார்க்க முடியாமல் தலை குனிந்து நின்றவன் வானவரையன்! இந்த சூழ்நிலையில் என்ன பேசுவதென்று புரியாமல் தன் தங்கையிடம் விடை பெற்றுக் கொண்டான் செங்கணான்.

வள்ளல் பாரி சலவைக்கல் பள்ளியில் சாய்ந்தார்.

புகழ் பெருகி வரும்போது, ஒரு மனிதனுக்கு அடக்கமும் கூடவே வருமானால், அவன் புகழ் இன்னும் அதிகமாகப் போகிறது என்று பொருள். ஒவ்வொரு கட்டத்திலேயும் பாரி, அப்படியே விளங்கினான்.

பாரியைப் பற்றிப் பாடாதார் தென் தமிழகம் முழுவதிலேயும் எங்கேயும் இல்லை. சேர நாடு உட்பட அவன் புகழ் பரவாத இடம் இல்லை. பாரியும் காரியும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள் என்றாலும், பாரிக்கே அளவு கடந்த புகழ் இருந்தது. அந்தப்



புகழைப்பற்றி அவன் மெய்சிலிர்த்தது இல்லை. புகழ் இல்லாமல் போனாலும் அவன் கவலைப்படவில்லை.

அவன், சாய்ந்து கிடந்தபோது ஒரு சடலத்தின் உணர்ச்சியே அவனுள் நிறைந்து கிடந்தது. எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ளும் ஒரு மனப்பக்குவத்தை, பாரி பெற்று இருந்தான்! இத்தனைக்கும் அவன் நாற்பத்து ஐந்து வயதைக் கடந்து விடவில்லை. துணையை இழந்தபின் பாரி பறம்பில் ஒரு துணையையும் தேடிக்கொண்டதில்லை. வந்திருக்கும் புதிய பெண்ணை அங்கவையும் சங்கவையும் அழைத்துக் கொண்டுபோய், "அப்பா! இவள்தான் தளபதியின் சகோதரி" என்றார்கள்.

"அப்படியா? மிக்க மகிழ்ச்சி. அழகான பெண், நல்ல குணம் போலும் தெரிகிறது. இங்கேயே இரு அம்மா!" என்று சொல்லி மறுபடியும் பள்ளியில் சாய்ந்தார் பாரி.

"உங்களுக்குத் தாயம் விளையாடத் தெரியுமா?" என்று கேட்டாள் அங்கவை.

"தெரியும்" என்றாள் கதலி.

"எனக்கு அந்த விளையாட்டில் மிகவும் பிரியம். நாம் இப்போது விளையாடலாமா?" என்றாள் சங்கவை. தாயம் விளையாடுவதற்கான சலவைக் கல் ஒன்றினை அங்கேயே வைத்திருந்தார்கள்!

"இது என்ன! இங்கேயே இருக்கிறது?" என்று கேட்டாள் அங்கவை!

"வருகின்ற விருந்தாளிகளுக்கு எப்போதும் ஏதாவது பயன் படவேண்டும் என்பதற்காக பல பொருட்களை மன்னர் இங்கேயே வைத்திருக்கிறார்.

இவையன்றியும் ஒரு ஊஞ்சலைப் பார்த்திருக்க முடியும். அந்த ஊஞ்சலோடு நீராடும் குளம் ஒன்றினையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். அந்த நீராடும் குளம் சுற்றிலும் அடைக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் பெண்கள் விரும்பினால் ஆனந்தமாக குளித்துக் கொண்டேயிருக்கலாம். ஆடவர்கள் அங்கே வர மாட்டார்கள். அத்தகைய வசதிகளைக் கொண்ட இந்த இல்லத்தை வருகிற விருந்தினர்களுக்காகவே படைத்திருக்கிறார் மன்னவர்" என்றாள் கதலி.

"அடடா! இங்கேயே இருக்க வேண்டும் போல தான் எனக்கும் தோன்றுகிறது" என்று சொன்னாள் சங்கவை.

"ம்! பறம்பு மலையைவிட இது அதிக வசதிகள் கொண்ட இடம் தான். ஆனாலும் கூட ஒவ்வொரு பெண்ணுக்கும் பிறந்த வீட்டை விடப் புகுந்த வீடு தானே பெருமையாகத்தெரியும்" என்றாள் அங்கவை.

"நான் அப்படி நினைக்கவில்லை. பிறந்த வீட்டை விட்டு எப்போது ஒருத்தி புகுந்த வீட்டிற்குப் போய் விடுகின்றாளோ, அப்போதே அவளுடைய பாசமும் கூடப்போய்விடுகிறது என்று கருதுகிறேன்" என்றாள் கதலி.

"அது எப்படிச் சொல்லுகிறீர்கள்! இருபது யாக்கை வரையிலும் வளர்த்து, கடைசி வரையிலும் கண்ணைப் போன்று காத்திருந்த தாயையும் தந்தையையும் விட்டுவிட்டு, கணவனது காலடி தொடருவது நியாயந்தான். ஆனால் அங்கே சென்றவுடனேயே, பிறந்த இடத்தை விடப் புகுந்த அகமே போகம் என்று எப்படி ஏற்பட்டு விட முடியும்?"



என்றாள் அங்கவை. "அந்த இடத்திற்குப் போய் விட்டால், நாம் மீண்டும் எங்கேயும் திரும்ப முடியாது."

"எந்த இடத்தில் நாம் இறுதிக் காலம் வரையிலும் வாழ்ந்து தீரவேண்டுமோ, அந்த இடத்தை நேசிப்பது ஒன்றுதான், பிறந்த இடத்தை மறப்பதற்கு வழியாகும்" என்றாள் கதலி.

"அதென்னவோ, இதில் நமக்கு ஒத்தக் கருத்தும் உடன்பாடும் இல்லை. யானும் என் தங்கையும் இருக்கின்ற வரையில், இந்த உலகில் வாழ்கின்ற வரையில், என் தந்தையையே நேசிப்போம். எங்கள் தந்தைக்குப் பிறகுதான் எங்கள் திருமணத்தையே நாங்கள் யோசிப்போம்" என்றாள் அங்கவை.

"இது வேடிக்கையான நிலை. தாங்கள் தங்கள் தந்தையின் மீது வைத்திருக்கும் பாச உணர்வை நான் மதிக்கிறேன். ஆனால், இது ஒரு பெண்ணுடைய பெண்மைக்கும், பெண் காட்ட வேண்டிய நியாயத்திற்கும் உரியதாகாது" என்றாள் கதலி.

"எந்தப் பெண்மையும் காதலிலும் குடும்ப வாழ்க்கையிலும் தான் கடைத் தேறுகிறது என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் பெற்ற தந்தையையும் பிறந்த வீட்டையும் மறந்து விட்டு, புகுந்த வீட்டிலேயே உறவு கொண்டாடுவது என்பது எனக்குப் புரியவும் இல்லை, பிடிக்கவும் இல்லை. ஒருவேளை எங்கள் தந்தையோடு வளர்ந்த சூழ்நிலை அப்படியிருக்கலாம்" என்றாள் அங்கவை.

"அந்தப் பறம்பு மலையை விட்டு இறங்கி வேறொரு இல்லத்துக்குள் நுழைவதையே சிந்திக்கக்

கூட, முடியாதவர்களாக நாங்கள் இருக்கக் கூடும். ஆனால் உங்களுடைய பண்பாட்டை நான் மதிக்கிறேன். எங்கே நீங்கள் புகுந்து விடுகிறீர்களோ, அந்த இல்லம் உண்மையிலேயே மிகச் சிறப்பான இல்லமாகவே இருக்கும். உங்களுடைய வருகை எந்த இல்லத்திற்குக் கிடைக்கிறதோ அந்த இல்லம் வரம் பெற்ற இல்லமாகவே வாழப்போகிறது. வாழ்க! உங்கள் நல்ல நெய்வு!" என்று அவளை வயதானவளைப் போல் வாழ்த்தினாள் சங்கவை.

சிரித்துக் கொண்ட கதலி, "ஏதோ ஒரு கருத்தில் இரண்டு பேருக்கும் ஒப்புதல் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பரிமாறிக் கொண்டோம். என்னை நீங்கள் வாழ்த்தினாலும் சரி, உங்களை நான் வாழ்த்தினாலும் சரி அந்த வாழ்த்துப் பலிக்கிறது. நல்ல எண்ணங்கள் நல்ல உள்ளங்கள் பரிமாறப்படும்போது, அந்த அலைகளாலே மனித உயிர்கள் அதிக நாள் வாழ்கின்றன என்று கவிஞர்கள் பாடுகிறார்கள். அந்த முறையிலே உங்கள் வாழ்த்திலே நான் பலன் பெறுவேனானால், அதுவே எனது மகிழ்ச்சிக்கு உரியதாக இருக்கும்" என்றாள் கதலி.

"மூவரும் ஏதோ அவ்வையார் மூன்று வடிவம் எடுத்துப் பேசுவது போலல்லவா பேசிக்கொண்டிருக்கிறோம். சரி, நாம் விளையாடலாம்" என்றாள் அங்கவை.

தாயம் விளையாட அவர்கள் தொடங்கினார்கள். வானிலே நிலா வலம் வந்து கொண்டிருந்தது. ஆம், ஒரே இடத்தில் நிற்பது போலவும், உருண்டு உருண்டு வருவது போலவுமே, வானவரையனுக்கு அது தோன்றிற்று.

# 4

அன்று ஆடிப் பதினெட்டு!

குடகிலே பெய்யும் மழையின் வெள்ளம், ஆடி பதினெட்டாம் நாளன்றுதான் காவிரியில் பெருகி ஓடும் என்பதனை, பல்லாயிரம் ஆண்டுக் காலமாக, தமிழகம் கண்டு வந்திருக்கிறது! பருவம் தப்பாத அந்தக் காலத்தில், அது முறையாகவும் நடந்து வந்திருக்கிறது. ஆகவே, ஆடிப் பதினெட்டை ஆடிப் பெருக்கு விழாவாகக் கொண்டாடுவது சோழ மண்டலத்தின் வழக்கமாகவும், அந்த விழாவே பெருவிழாவாகவும் இருந்து வந்திருக்கிறது.

அன்றும், ஆடி பதினெட்டு, தப்பாமல் தவறாமல் பெருவெள்ளமாக உருவெடுத்தது! பொன்னி இரு கரையிலும் அலைமோதிப் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கினாள்! கரை மருங்கின் இரண்டு பகுதியிலும் பெரும் கூட்டம் கூடி அந்தக் காட்சியைக் கண்டு களித்துக் கொண்டிருந்தது.

ஆடி பதினெட்டிலே, அமைதியான ஒரு பகுதியில் குளிப்பது என்பது, அன்று உற்சாகமான செயலாக இருந்து வந்தது! இளம் மாதருக்கும், இளம் காளையருக்கும் அந்த நாள் ஓர் இன்பத் திருநாளாகும். அவர்கள் அதிகாலையிலேயே எழுந்து பொன்னியிலே விழத் தொடங்கினால், அவர்கள்

அன்று மீண்டும் வெளியேறி வரும் பொழுது உச்சி வெயில் வந்திருக்கும். அவ்வளவு நேரம் பொன்னி யிலே குளிப்பது ஓர் ஆனந்தம் என்று தான் அன்று இளைஞர்களும், இளம் மாதரும் களித்தார்கள்.

காவிரியின் கரையும் தெரியாமல், அடிதொடும் மணலும் தெரியாமல் வெள்ளம் புரளும் அந்த ஆடிப் பதினெட்டில், சோழ மண்டலம் ஆயிரக்கணக்கான தேங்காய்களையும் வாழைப் பழங்களையும் அந்தக் கரையிலே கொண்டு வந்து குவித்து, எல்லாவற்றை யும் பொன்னி நதிக்கு உடைத்து, "எங்கள் மண்டலத்தை வாழவைக்கும் தாயே! உன்னை வணங்குகிறோம்" என்று வணங்குவதும் வழக்க மாகும்! வேறு எந்த விழாவையும் விட அந்த விழா வையே சோழ மன்னர்கள் பெரிதாகக் கொண்டாடி னார்கள்.

அந்த விழாவுக்குப் பாரி வந்திருந்தது இதுவே முதல் தடவை.

அன்றைய சோழ மக்கள் காவிரியின் வெள்ளத் தையும் கண்டார்கள். வந்திருந்த வள்ளல் பாரியை யும் கண்டார்கள். அவரது மக்கள் அங்கவை, சங்கவையையும் கண்டார்கள்.

கரையிலே மன்னவர்களது தேர்கள் வந்து நின்ற போது அந்தத் தேர்களைச் சுற்றி பெருங்கூட்டம் கூடிற்று. ஆடி வெள்ளம் போல் அனைத்தையும் வாரி வாரி வழங்குகின்ற அந்த உள்ளங்கள் சிவந்து இருப்பதனையே அவர்கள் கண்டார்கள்! மன்னவன்



பாரியைக் கண்ட அதே கண்ணோடு, மன்னவன் சோழனையும் அவர்கள் கண்டார்கள்!

பாரியிடம் யார் யார் அன்பு செலுத்துகின்றார் களோ அவர்கள் எல்லாம் தங்கள் அன்புக்குரிய வர்கள் என்பது போல அவர்கள் மொய்த்துக் கொண்டார்கள்.

அந்தக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு சேனா வீரர்கள் காவிரியில் குளிப்பதற்கு அங்கவையையும் சங்கவையையும் கூட்டிச் சென்றார்கள்.

தளபதி வானவரையனுக்கு ஒரே உற்சாகம் பிறந்து விட்டது. இப்படிப்பட்ட பெரும் வெள்ளத்தை அவன் மலையிலே கண்டதில்லை அல்லவா! இது வரையிலும் மலையைவிட்டுக் கீழே இறங்க வேண்டிய அவசியம் அவனுக்கு வந்ததும் இல்லை.

மலையிலே போரும் கிடையாது. மலையை விட்டுக் கீழே வரவேண்டிய அவசியமும் கிடையாது என்பதனால் மலைவாசியாகவே வாழ்ந்து விட்ட வானவரையன் பெருகி ஓடும் நதியினைக் கண்டதும் அதிலே குதித்து ஆடவேண்டும் என்ற ஆசை கொண்டான்.

அந்த நதியிலே குளிக்கும்போது மிக எச்சரிக்கை யாக இருக்கவேண்டும் என்று, சோழ மன்னர் எச்சரித்தார். காரணம், வெள்ளம் ஒரே சீராக வராது. திடீர் திடீரென அதிகரிக்கும், திடீரெனக் குறையும். எப்போது அதிகரிக்கும், எப்போது குறையும் என்பது

அந்த காவிரி மாதாவுக்கே தெரியும். ஆகவே, "நீங்கள் குளிக்கும்போது எச்சரிக்கையாக இருங்கள்" என்று அவனிடம் கூறி வைத்தார்.

வானவரையனுக்கு இருந்த உற்சாகத்தில் மன்னருடைய எச்சரிக்கை மறந்தே போய்விட்டது. அவன் நதியினுள் இறங்கினான். இக்கரையில் இருந்து அக்கரைக்கே போய்விடுவது போல் நீந்தத் தொடங்கினான். விளையாடத் தொடங்கினான். ஆனால், சோழ மன்னன் எச்சரித்தது போல, மாபெரிய வெள்ளம் ஒன்று வந்து, வானவரையனை அடித்துக் கொண்டு போகத் தொடங்கிற்று.

"அய்யோ! வானவரையரை வெள்ளம் அடித்துக் கொண்டு போகிறது, அடித்துக் கொண்டுபோகிறது" என்று அங்கவையும் சங்கவையும் கதறினார்கள்! பதறினார்கள்!

"நான் அப்பொழுதே சொன்னேன், தவறு செய்து விட்டாரே!" என்று வருந்திய சோழ மன்னன் தன் சேனா வீரர்களைப் பின்னாலேயே குதிக்கச் சொன்னான்! அவர்களும் குதித்து, வேண்டும் வரையிலே நீந்திப் பார்த்தார்கள். ஆனால், காவிரியிலே மேலும் மேலும் வெள்ளம் பெருமளவிற்குப் பொங்கி வந்தது! இனி தாங்களும் சிக்கிக் கொள்வோமோ என்று அஞ்சிய நிலையில் பல வீரர்கள் கரையேறி விட்டார்கள்.

வானவரையனை காவிரி இழுத்துக்கொண்டு போகத் தொடங்கிற்று.



"சோழ மண்டலத்தில், காவிரியை எதிர்த்து நீந்தக் கூடியவர்கள் யாருமே இல்லையா? என்ன வெட்கக்கேடு" என்று ஒரே கேள்வியோடு காவிரியில் குதித்தாள், கதலி!

"கதலி" என்று ஓங்கிச் சத்தமிட்டான் சோழ மன்னன்!

"கதலி" என்று அடுத்து குரல் எழுப்பினான் செங்கணான்.

"அய்யோ! இந்தப் பெண் யாது செய்யக் கூடும். இவள் ஏன் குதிக்கின்றாள். கொஞ்சம் சொல்லுங்கள். அவளை திரும்ப அழையுங்கள்" என்று குரல் கொடுத்தான், பாரி மன்னன்.

"நீங்கள் கலவரம் கொள்ள வேண்டாம். காவிரியை அடக்கக்கூடிய சக்தி, கதலிக்கு மட்டுமே உண்டு" என்று அங்கிருந்த ஒரு பெண் சொன்னாள்.

"என்னதான் சக்தியிருந்தாலும், இவ்வளவு பெரிய வெள்ளத்தில் எதிர் நீச்சல் போடுவதற்கு அவளுக்குத் திறமை ஏது? ஆடவர்களே அஞ்சி விட்ட ஒரு விஷயத்தில் அவள் இவ்வளவு துணிச்சலாக இறங்கியிருக்க வேண்டாம்" என்றான் சோழ மன்னன்.

கரையிலே தேங்காய் உடைப்போரும், ஆரத்தி எடுப்பவர்களும் என்ன அவலமோ என்று அஞ்சிய வாறு, கைகட்டி நின்று கொண்டிருந்தார்கள். செய

லற்று கரைகள் நிற்க, நதி முன்னாலே வானவரையனையும், வெகுதூரத்தில் பின்னாலே கதலியையும் இழுத்துக் கொண்டு ஓடத் தொடங்கிற்று.

"உறந்தைக்கு நாம் வந்தது ஒரு உத்தமத் தளபதியை இழக்கவே" என்று வருந்தினான் பாரி மன்னன்.

வானவரையனை இழந்து விட்டதாகவே அங்கவையும் சங்கவையும் கண் கலங்கினார்கள்.

வந்திருக்கும் விருந்தாளியின் தளபதியையும், நீண்ட காலமாக தான் வளர்த்து வரும் மகளையும் ஒரே நேரத்தில் பறிகொடுக்க நேர்ந்ததை எண்ணி காவிரி விட்ட கண்ணீரைவிட அதிகமாக கண்ணீர் விட்டான் சோழ மன்னன்.

ஆனால் அங்கிருந்த ஒரு பெண்ணோ மீண்டும் மீண்டும், முன்னும் பின்னும் நடந்தவாறே கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு, "நீங்கள் அஞ்சுதல் வேண்டாம். அவர்கள் உயிருடன் திரும்பி வருவார்கள். இங்கிருந்து வெகுதூரத்தில் அவர்கள் கரை ஏறி நாளை மாலைக்குள் உங்களை வந்து அடைவார்கள்" என்று சொல்லிக் கொண்டேயிருந்தாள்.

என்ன, அவளது கணிதம்! எதைக் கருதி இப்படிச் சொல்லுகிறாள் என்று, கோபம் வந்து விட்டது சோழ மன்னனுக்கு.

"இதோ பார், இவ்வளவு கொடுமையான வெள்ளத்தில் அவர்கள் சிக்கிக்கொண்டு போயிருக்கிறார்



கள். மீண்டும் கரையேறுவார்கள், கரையேறுவார்கள் என்று, பொய்யான நம்பிக்கையை நீ யாருக்குத் தருகிறாய்? நீ யார்?" என்று கேட்டார், அவர்.

அந்தப் பெண், அமைதியாக, பின்புறம் இருந்த கையை முன்புறம் தூக்கிக் கட்டிக்கொண்டு, விரித்த கூந்தலோடு, "என் பெயர் காளி, நான் இவ்வூரிலேயே பல்லாண்டு காலமாக குடியிருந்து வருகிறேன். மன்னவா, காவிரியுடைய சீற்றம் எனக்குத் தெரியும். யாரை அவள் சீறுவாள், யாரிடம் அவள் மாறுவாள். எந்த நிலையில் அவள் தேறுவாள் என்பது அனைத்தையும் நான் அறிவேன்" என்றாள்.

"நல்லது! நீ அறிந்ததை, நீ உன்னுடனேயே வைத்துக் கொள்! அவர்கள் மீண்டும் கரையேறி வருவார்களானால், அப்பொழுது நீ என்னிடம் வா, உன்னை நான் கவனிக்கிறேன்" என்றார் சோழ மன்னர்.

பொழுது போய்க் கொண்டேயிருந்தது." நேரம் ஆக, ஆக அவர்கள் திரும்புவார்கள் என்ற நம்பிக்கையை சோழனும் இழந்தான், பாரியும் இழந்தான்.

காவிரியில் ஆடிப் பெருக்கு காண வந்து இவ்வளவு கவலைக்குரியவர்களாக ஆகிவிட்டோமே என்று சொன்னவாறு, சோழ மன்னன் தேரிலே ஏறினான்.

தன்னுடைய கவலையைக் காட்டாதவாறு, பாரியும் தேரில் ஏறி, "அற்புதமான தளபதி, அருமையான தளபதி! இப்படி ஒருவனை நான் இழந்து

விட்டதற்காக வருந்துகிறேன். ஆனாலும், காவிரி அன்னை அவனைத் திருப்பிக் கொடுப்பாள் என்கிற நம்பிக்கை இருக்கிறது," என்று சொல்லிக்கொண்டே தேரில் ஏறினான்.

தேர் புறப்பட்டபோது, அங்கவையும், சங்கவையும் தாங்கள் ஈர உடையில் இருப்பதைக்கூட மறந்து விட்டார்கள்.

மண்டபத்திலே அவர்களைக் கொண்டு வந்து இறக்கிவிட்ட சோழ மன்னன், "நாம் வணங்குகின்ற வானமாதேவி என்றைக்கும் நம்மைக் கைவிட மாட்டாள்," என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

ஆடை மாற்றிக் கொண்டு, துக்கமே வடிவாக அங்கிருந்த கல்லில் அமர்ந்து விட்டார்கள் அங்கவையும், சங்கவையும்.

காவிரி இழுத்துக் கொண்டு போன வானவரையனை ஒரு இடத்தில் மணல் மேட்டில், அப்படியே நிறுத்தி வைத்தது. பின்னாலேயே இழுத்துக் கொண்டு வந்த கதலியையும், அதே மணல் மேட்டில் இழுத்துக் கொண்டு வந்து நிறுத்தியது.

மயக்கத்தில் கிடந்த வானவரையனை அப்படியே கைத்தாங்கலாக எடுத்தபடி, அங்கிருந்தே கரையேறத் தொடங்கினாள் கதலி.

ஏறக்குறைய, ஒன்றரைக் காவக தூரம் அவர்கள் இழுத்து வரப்பட்டிருந்தார்கள். (15 மைல்).



எங்கிருக்கிறோம், தாங்கள் எங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறோம் என்பதை அறியாதவாறு அந்தக் கரையிலே, அந்தக் காட்டிலே சிறிது நேரம் அவர்கள் இருவரும் மயக்கமுற்றுக் கிடந்தார்கள்.

கதலியைவிட அதிகமாக மயங்கி இருந்தவன் வானவரையன்.

வானவரையனுக்கு இந்த அனுபவம் புதியது. கதலிக்கோ இது மிகவும் பழையது. ஆண்டுதோறும் இந்த விழாவில் அவள் கலந்து கொண்டிருக்கிறாள். காவிரியின் சீற்றத்தையும் கவனித்து இருக்கிறாள். காவிரியிலே குளித்து பல நேரம் இடம் தாண்டி கரையேறியிருக்கிறாள். ஆகவே, அவள் மெதுவாக எந்த உடை கொண்டு அவனைத் துடைப்பது என்று இல்லாமல், தன்னுடைய கரங்களாலே அவனுடைய முகத்தை துடைத்துவிட்டு, அவனை அப்படியே தன் மடியில் குப்புறப் போட்டு, தண்ணீரை அவன் குடித்திருந்தால், வெளியிலே அவன் கொட்டிவிட்டும் என்பதற்காக அவன் தலையிலே சிறிது நேரம் தட்டிக் கொண்டேயிருந்தாள்.

அவன் குடித்திருந்த தண்ணீரை வெளியே கொட்டினான். பிறகு அந்த மடியிலேயே அவனை சாய்த்துக் கொண்டு, "இப்பொழுது எப்படி இருக்கிறது ?" என்று கேட்டாள் கதலி.

"மோசமில்லை ! நான் நன்றாகவே இருக்கிறேன்," என்று சொன்னபடி மீண்டும் கண்களை மூடினான் வானவரையன்.

தூரத்தில் சில இளம் பெண்கள், மார்புக் கச்சை யணிந்து, பாவாடை கட்டி, கையிலே ஒரு சிறிய கூடையை ஏந்தியவாறு சென்று கொண்டிருந்தார்கள்.

அவர்கள் என்ன கொண்டு போகிறார்கள் என்பது கதலிக்கு மட்டுமே தெரியும். அந்த நேரத்தில் அவர்கள் கொண்டு போவது, முளைத்த பனை மரத்தின் அடிப்பாகம். முளைத்த மூன்று மாத காலத்திற்குள்ளாக ஒரு பனைமரத்தின் அடிப்பாகத்தைத் தோண்டி எடுத்தால், சுவையுள்ள கிழங்கு அதிலே கிடைக்கும். அந்தக் கிழங்கினை சாப்பிடுவது, அந்த நாளிலே ஒரு பழக்கமாக இருந்தது. சுவையான அந்தக் கிழங்கு உடலுக்கு சக்தி தரக்கூடியதுமாகும். அவர்களைக் கைகாட்டி அழைத்தாள் கதலி.

யாரோ இருவர் அங்கு கிடப்பதைப் பார்த்து, "அதோ பாரடி ? யாரோ இருவர் கரையிலே கிடக்கின்றார்கள். காவிரி இழுத்து வந்தாள் போலிருக்கிறது. வாருங்கள் போவோம்" என்று ஒருத்தி அழைத்தாள். மற்றவர்கள் பின் தொடர்ந்தார்கள், ஒரு மானைத் தொடர்ந்து பல மான்கள் ஓடி வருவதைப் போல்.

அவர்களைப் பார்த்து அப்படியே அசைவற்று உட்கார்ந்திருந்தாள் கதலி.

அருகிலே வந்த அந்தப் பெண்கள், "என்னம்மா வேண்டும் ? நீங்கள் யார் ?" என்று கேட்டார்கள்.



"நாங்கள் உறந்தை ! காவிரி எங்களை இழுத்துக் கொண்டு வந்துவிட்டாள். இப்பொழுதுதான் கரை யேறினோம். உங்கள் கையிலே இருப்பதை எங்களுக்கு கொடுத்தால் எங்களுடைய பசியும் தீரும், உடம்புக்கு சக்தியும் வரும்" என்றாள் அவள்.

"நல்லது! இவைதானே வேண்டும் உங்களுக்கு, இதோ!" தங்களது கூடைகளைக் கீழே இறக்கி மண்டியிட்டபடி அவர்கள் முன்னால் அமர்ந்தார்கள் அந்த இளம் பெண்கள்.

அந்தக் கிழங்கை எடுத்து மேல்பகுதியை அப்படியே உரித்து உள்ளிருந்த சுவையான கிழங்கை ஒவ்வொன்றாகக் கிள்ளியெடுத்து, அவன் வாயிலே ஊட்டினாள் கதலி.

எவ்வளவு பசியோ வானவரையனுக்கு! கொடுப்பது யார், வாங்கியது எங்கே ? என்ற விவரங்கள் இன்றி சாப்பிட்டுக் கொண்டேயிருந்தான்.

அவன் சாப்பிடச் சாப்பிட அவள் ஊட்டிவிட்டாள். சிறிது நேரத்தில் அந்தச் சாப்பாட்டினுடைய சக்தியாலோ, இல்லை அவள் கைபட்ட மந்திரத்தாலோ அவன் எழுந்து அமர்ந்தான்.

"கிழங்கு சுவையாக இருக்கிறதா ?" என்று கேட்டாள் கதலி.

"நான் உயிரோடு இருக்கிறேனே அது ஒன்றே போதாதா? இனி எதை நீ கொடுத்தாலும் அது சுவையாகவே இருக்கும். என்னைக் கரையேற்றுவித்தது ஒரு பெண் என்பதை எண்ணும்போது எனக்கே

வெட்கமாகத்தான் இருக்கிறது'' என்றான் வான வரையன் கிழங்கைக் கடித்தபடியே!

''அதைப் பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்? சமயங்களில் பெண்கள் ஆடவர்களைவிட வலுவுள்ள வர்களாக இருக்கிறார்கள். அதுதான் சிருஷ்டியி னுடைய இரகசியம்!'' என்றாள் அவள்.

''இப்படிப்பட்ட ஒரு மடியில் படுத்துக் கிடக்க முடியும் என்றால் இன்னும் எத்தனை தடவை இந்த நதியில் நான் இழுத்துக் கொண்டு வரப்பட்டாலும் கவலைப்பட மாட்டேன்'' என்றான் அவன்.

அவள் சிரித்தபடி தலைகுனிந்தாள். தன்னைப் புகழ்வதனை குலமங்கையரும் பிற மங்கையரும் பெரிதும் விரும்புவார்கள். ஆனால், விரும்பாததைப் போலவே காட்டிக் கொள்வது குல மங்கையருடைய பண்பாகும்.

அதை விரும்பாதவள் போல அவள் காட்டிக் கொண்டாள் என்றாலும், இன்னும் கொஞ்சம் பேச மாட்டானா என்பது போல ஆதங்கத்தோடு தலை யைத் தூக்கிப் பார்த்தாள்.

''நீங்கள்தான் என்னைத் தொடர்ந்து வருகின் றீர்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால், நதி யிலே அடித்துக் கொண்டு போகும் போது பின்னா லேயே ஒரு உருவம் கொண்டு வரப்படுவதையும் நான் பார்த்தேன். அது, யாரோ? எவரோ எனக்காக அவர்கள் உயிர் நீக்கப் போகிறார்களே என்று கலங்கினேன். நான் இறப்பது உறுதி என்று முடிவு



கட்டியிருந்தேன். ஆனால், இப்படி ஒரு கரையில் என்னை நீங்கள் கொண்டு வந்து சேர்த்து உயிர்ப்பிப் பீர்கள் என்பதனை நான் அறியமாட்டேன். இதற்கு எந்தக் காலத்திலும் நான் கைம்மாறு உள்ளவனாக இருப்பேன்'' என்றான் வானவரையன்.

''என்ன கைம்மாறு தருவீர்கள்'' என்று குனிந்த படியே கேட்டாள் அவள்.

''நீங்கள் எதைக் கேட்கிறீர்களோ, அதை!''

''முதலில் நீங்கள் என்கிற மரியாதை வார்த்தையைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, நீ என்றே அழையுங்கள்'' என்றாள், கதலி.

''நாங்கள் யாரையுமே அப்படித்தான் மரியாதை யோடு அழைப்பது வழக்கம். எங்களது மலையுடைய பண்பாடு அது'' என்றான் அவன்.

''உலகத்தில் அன்புக்குரியவர்கள் மரியாதைக் குரியவர்கள் என்று இருவர் உண்டு. அன்புக்குடைய வர்களே அதிகமான நெருக்கம் உடையவர்கள். மரியாதைக்குரியவர்கள் எப்போதும் தூரத்திலேயே வைக்கப்படுகின்றார்கள்'' என்றாள் கதலி.

''நான் உங்களை தூரத்திலேயே வைத்திருக்க விரும்பவில்லை. நீங்கள் அருகிலேயே இருக்க வேண்டும். எங்கள் மலை விரிந்த மலை. அது உங்களுக்கும் இடம் கொடுக்கும்'' என்றான் அவன்.

அவள் சிரித்தாள். அதன் உட்பொருளை அவனால் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

அந்தச் சிரிப்புக்கு உள்ளர்த்தம் என்ன என்பதனை அவளும்கூட அப்போது உணரவில்லை. மெதுவாக இருவரும் எழுந்தார்கள். ஒன்றரைக் காவத தூரம் நடக்க வேண்டும் என்பதனை அப்போது அவர்கள் அறிய மாட்டார்கள். ஆனால், அவளும் அவனுமாக இருந்த காரணத்தினால் இருவரும் நடக்க நடக்க தூரம் குறைவாகவே தோன்றிற்று.

அந்திபடும் நேரத்திலே அவர்கள் உறந்தைக் கரையில் வந்து நின்றார்கள். உறந்தைக்கு வரும் பொழுது அவர்கள் கால்கள் இரண்டும் பெருத்த வலியெடுத்தன. ஆனால், அந்த வலி தெரியாதவாறு அவர்களுக்குள்ளே ஒரு உடன்பாடும் உற்சாகமான பேச்சும் இருந்ததால் வழிப் பயணம் அலுக்கவில்லை.

உறந்தைக் கரைக்கு வந்தபோது அவர்கள், ஏராளமான மலர்கள் ஆங்காங்கே சிதறிக் கிடப்பதைக் கண்டார்கள்.

ஏராளமான மலர்களை பொன்னி அடித்தபடி வந்துகொண்டிருந்தாள். பல இடங்களிலே தேங்காய் உடைக்கப்பட்டு உடைந்த சில துண்டுகள் ஆங்காங்கே கிடந்தன. எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே, "ஏதோ ஒரு துன்பமயமான நிகழ்ச்சி என்று கருதி இன்றைய விழாவை முழுக்க நிறைவேற்றாமல் மன்னர் பிரிந்திருக்கிறார் போலும். நாம் அங்கே சென்று, நம்முடைய வருகையை உடனடியாக அறிவிக்க வேண்டும்" என்றாள் கதலி.

"வா செல்வோம்!" என்று இருவரும் மண்டபத்துக்குள்ளே சென்றார்கள்.



மண்டபத்துக்குள்ளே இருவரும் நுழையும்போது வைத்த உணவு வைத்தபடியே இருந்தது. அதை உண்ணாமலும் எந்தவிதமான அமைதி கொள்ளாமலும் அங்கே உலாவியபடி இருந்தார்கள் அங்கவையும் சங்கவையும்.

கருங்கல் பள்ளியிலே சாய்ந்தவாறு இருந்தார் பாரி மன்னர்.

"ஐயா!" என்ற குரல் கேட்டபோது அனைவரும் திரும்பிப் பார்த்தார்கள். கதலியும் வானவரையனும் அங்கே நிற்பதைப் பார்த்ததும் அவர்களுக்கு மீண்டும் உயிர் வந்தது.

'பொன்னி பிறர் உயிரை வாங்கமாட்டாள். காவிரி மாதாவுக்கு அந்தச் சீற்றம் இல்லை. யார் மீதும் அவளுக்குக் கோபம் இல்லை' என்றெல்லாம் அந்த நேரத்தில் ஒருபெண் சொன்னாளே, உண்மைதான் என்பது போல அவர்களுக்குத் தோன்றிற்று. அங்கவையும் சங்கவையும் அவர்கள் அருகில் ஓடி வந்தார்கள்.

பிறகென்ன உயிரோடு வந்தாகிவிட்டது. எப்படிப் போனோம், எப்படிப் பிழைத்தோம் என்ற கதைதானே!

வானவரையன் தனது ஆடையை மாற்றிக் கொண்டான். கதலியும் தனது ஆடையை மாற்றிக் கொண்டாள். கதை சொல்ல ஆரம்பித்தாள். கதை சொல்ல ஆரம்பிக்கும்போது நடந்த கதையை, அப்படியே சொல்ல வேண்டாமா?

அந்தக் கதைக்குப் பின்னாலேதான் ஒருசிறிய கதை ஒன்று நடந்திருக்கிறதே, அந்தக் கதையையும் மெதுவாக சேர்த்துக் குழைத்து எடுத்தவாறு அவள், நளினமாக கதை சொல்ல ஆரம்பித்தாள். "அவர் முன்னாலே இழுத்துக் கொண்டு போகப் பட்டாரா? பின்னாலேயே நான் வந்தேன்" என்றாள் அவள்.

"நான் வந்தேன்" என்று அவள் சொன்னவுடனேயே, 'என்னுடைய சக்திதான் அவளை ஈர்த்துக் கொண்டு வந்தது' என்கிற மாதிரி அவளைப் பார்த்தான், வானவரையன்.

'அவருடைய சக்தியாலேதான் நான் ஈர்க்கப் பட்டேன் !' என்பதுபோல் அவனைப் பார்த்தபடி கதை சொல்லிக் கொண்டிருந்தாள் கதலி.

அந்தக் கதை வெறும் காவிரியாறு இழுத்துக் கொண்டு போன கதையாக இல்லை. ஒரு காதல் இலக்கியமாகவும் இருந்தது.

ஆனால், அங்கவைக்கும் சங்கவைக்கும் அது புரியவில்லை ! அவர்களுக்கு அந்த அனுபவமும் இல்லை. அந்த தொடக்கமும் இல்லை.

பள்ளியிலே சாய்ந்திருந்த பாரிக்கு ஏதோ புரிந்தது. நம்முடைய தளபதி அந்தப் பெண்ணிடம் உள்ளார்ந்த அன்பு வைத்திருக்கிறார் என்பது மட்டும் அவருக்குப் புரிந்தது.

கதையை சிறிதாக முடிக்கவும் அவள் விரும்பவில்லை. சொல்லச் சொல்ல வானத்தில் பழையபடியும் நிலா வந்து சேர்ந்தது.



முந்திய நாள் வந்த அதே நிலா ! அதே நிலாவினுடைய ஊர்வலம் ! அந்த ஊர்வலத்தில் இந்தக் கதை முடியும்போது, நள்ளிரவு ஆகிவிட்டது.

நள்ளிரவுக்குப் பின்னாலே மீண்டும் அவர்கள் தாயம் விளையாட ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு எதிரிலேயே உட்கார்ந்து, அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் வானவரையன்.

வெள்ளி முளைக்கும் போதுதான் அவர்கள் தூங்கச் சென்றார்கள். உறங்கச் சென்றார்களே தவிர, பள்ளி கொள்ளவில்லை. பள்ளியில் படுத்தபடி அப்படியும் இப்படியும் ஆக திரும்பத் திரும்ப அலை மோதினாள் கதலி.

அப்படியேதான், வேறோர் பக்கத்தில் தானும் அலைமோதிக் கொண்டிருந்தான் தளபதி வானவரையன்.

ஒரே நாள் சந்திப்பு ! அதிலும் நெருக்கமான பிடித்தமான சந்திப்பு. இந்த அழுத்தமான சந்திப்புக்குப் பிறகு ஒரு மனிதனுடைய உள்ளமும், ஓர் இளம் பெண்ணினுடைய உள்ளமும், முழு ஐக்கியப்பட்டு, காதல் வயப்பட்டு இரவு நேரத்தில் தவியாய்த் தவிப்பது, ஒன்றும் புதியதல்ல. ஆனால், கதலி, ஒரு புதிய அனுபவத்தில் மிதந்தாள்.

இதுவரையிலே அவள், வாழ்க்கை என்பது தன்னுடைய விருப்பத்தை சுற்றி நடப்பது அல்ல என்றுதான் கருதியிருந்தாள். ஆனால், 'தன்னுடைய

கண்களும் தனக்கு பகையாகலாம்' என்பதை இப் போது உணர்ந்து கொண்டாள்.

எழுந்து அவளைப் பார்க்க வேண்டும் போல் தோன்றிற்று வானவரையனுக்கு. எழுந்து முன்னும் பின்னும் உலாவினான். அவளும் படுத்தபடியே உலாவுதல் போல் அப்படியும் இப்படியும் திரும்பிக் கொண்டேயிருந்தாள்.

இவர்களுடைய இந்த ஊடாட்டத்தில் மெது மெதுவாக வெள்ளி முளைத்தது, பளபளவென்று பொழுது விடிந்தது. விடிந்துவிட்ட பொழுதைப் பார்த்து 'வேதனைமிக்க பொழுதே, ஏன் விடிந் தாய் ?' என்று கேட்பது போலவே, இருவரும் எழுந்தார்கள்.

இருவரும் எழுந்து முதன்முதலாக வெளியிலே வந்தபோது, இருவரும் ஒருவருக்கொருவர் நேர்பட் டார்கள் ! மீண்டும் சந்திப்பு ! அது காலை நேரம் ஆனால் என்ன, கடும் பகலானால் என்ன, இரவா னால் என்ன ? அந்தச் சந்திப்பிலே பழையபடியும் உடம்பிலே ஒரு சூடு ; ஓர் உற்சாகம், ஒரு ஆசை, ஒரு தாகம், தணியாத அந்த நிலையில் இருவரும் பிரிய முடியாமல் பிரிந்தார்கள்.

குளிக்கும்போது, அவள் நெருப்பிலே குளித்தாள். வெளியிலே உலாவும் போது அவன் நெருப்பிலே உலாவினான்.

# 5

"அறிவேன் மகளே, அறிவேன் ! இரவில் வந்தும் கூட என்னை வந்து பார்க்க முடியவில்லை அல்லவா உன்னால் ! நீ என்ன நினைத்திருப்பாய், எப்படி இருந்திருப்பாய், அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு உன் மனம் எப்படி மாறியிருக்கும் என்பதை யெல்லாம் ஊகிக்க என்னால் முடியாதா ? நான் ஒரு மன்னவன் மட்டுமல்ல, ஒரு தந்தையும் கூட, ஒரு தந்தை மட்டுமல்ல இளைஞனாக இருந்தவனும் கூட !" என்றார் சோழ மன்னர்.

"இல்லை அரசே, நான்... அதாவது நான் வரும் போது ஈரமாக இருந்தேன். அதனால் நான் வரும் போது மீண்டும் இங்கே வரமுடியாமல், நான் வரும் போது..." என்று ஒரே வார்த்தையைத் திரும்பத் திரும்பச் சொன்னாள் கதலி.

சிரித்தார் சோழர். "எப்போது உளறுவார்கள் என்பதற்குப் புதிய இலக்கணமா வேண்டும்? நீயும் உளறத்தான் போகிறாய், அந்த தளபதியை பாரி சந்திக்கும்போது அவனும் உளறத்தான் போகிறான்,

எனக்குப் புரியாதா இதெல்லாம் !" என்றார் சோழ மன்னர்.

"நீங்கள் அதற்குள் இப்படி கணக்கிட்டு விட்டீர்களே" என்றாள் கதலி.

"இதிலே கணக்கிடுவதற்கு என்ன இருக்கிறது? இரண்டும் இரண்டும் நாலு என்றால் அது இக்கரையிலே சொன்னாலும் அவ்வளவுதான், அக்கரையிலே சொன்னாலும் அவ்வளவுதான்" என்றார் சோழ மன்னர்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை !" என்று அழுத்தமாக அதை மறுக்க விரும்பியது போல் கூறத் தொடங்கினாள் கதலி.

"அப்படியில்லை என்றால், வேறு எப்படியாவது இருந்திருக்கும். இதிலே நீ மறுத்துப் பேசினால் பேசப் பேச உன் அந்தரங்கம்தான் விளங்குமே தவிர வேறு எந்தக் காரணம் கொண்டும் உன்னால் மறுக்க முடியாது. இந்த நோயினுடைய ஆழமான தன்மையையும், இது எப்போது பிடிக்கும், எப்படி வளரும், வளர்ந்து விட்டால், எப்படி நாக்கு உளறும் என்பதையெல்லாம் நான் நன்றாக அறிவேன். இப்பொழுது உன் அண்ணனிடம் செல். எப்போது, என்ன நடத்தலாம், என்ன பேசலாம் என்பதை அவனே, என்னிடத்தில் பேசட்டும்" என்றார் சோழ மன்னர்.

"இல்லை, அரசே ! அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை !" என்றாள் கதலி.



"மீண்டும் மீண்டும் அதையே சொல்லாதே ! நீ சொல்ல வேண்டியது ஒன்றுதான். 'பேசுங்கள்' என்று சொல். இல்லையென்றால் வேண்டாம் என்று சொல். அந்த இரண்டு வார்த்தையில் இருந்து விவரங்கள் ஊகித்துக் கொள்கிறேன்" என்றார் சோழ மன்னர்.

தலை குனிந்தபடி நின்றாள் கதலி.

"நீ நிற்பதிலே இருந்து எனக்குப் புரிகிறது. யார் ஊமையாக நிற்கிறார்களோ, அவர்கள் சம்மதம் தெரிவிக்கிறார்கள். நான் சொன்னதை நீ மறுக்கவில்லை என்று பொருள். அவ்வளவுதானே !"

"நல்லது செங்கணா ! அடுத்து நீ செய்ய வேண்டியது ஒன்றுதான். நான் பாரி மன்னரிடம் பேசுகிறேன். நீ தளபதி வானவரையனைப் பார்த்துப் பேசு. 'உன்னை என் தங்கை விரும்புகின்றாள். விரும்புகிற அவளை நீ மணம் முடிக்க விரும்புகிறாயா' என்பதை மட்டும் கேள். பிறகு மணம் முடிப்பது எங்கே எப்படி என்பதை எல்லாம் நானும் பாரி மன்னரும் தீர்மானிக்கிறோம்" என்றார் சோழ மன்னர்.

"நல்லது அரசே !" என்றான் அவன் !

அவன் முன்னால் நடக்க, விடைபெற்றுக் கொள்ளுகின்ற மனம்கூட இல்லாமல் பின்னாலே நடந்தாள் கதலி.

"இதோ பார் கதலி ! என்னிடம் சொல்லிக் கொள்ளாமலேயே நீ போகின்றதைப் பார்க்கின்ற போது, உனது உள்ளம் எங்கே லயித்திருக்கிறது,

எங்கே இணைந்திருக்கிறது என்பது எனக்குத் தெரி கின்றது !" என்றார் சோழ மன்னர்.

பின்னாலேயே போன கதலி, அரண்மனை வாசலைத் தாண்டியதும், "அண்ணா ! அவர் சொல்வது போல் ஒன்றுமில்லை. எங்களுக்குள் வேறொன்றுமில்லை. அவர் முன்னாலே போய் ஒரு மணல் மேட்டில் சிக்கிக் கொண்டார் ! பின்னாலே நான் போனேன். என்னைக் கொண்டுபோய் சேர்த்த காவிரி அன்னை அவர் அருகிலேயே சேர்த்தாள். அங்கிருந்து மெதுவாக கைத்தாங்கலாக அணைத்த படி நான் கரையில் கொண்டு வந்தேன்" என்று கதையை சொல்லத் தொடங்கினாள்.

"இதோ பார் ! இந்தக் கதையெல்லாம் வேண் டாம் ! கைத்தாங்கலாக ஒருவனை அணைத்த பிற் பாடு கதை எப்படி வளரும், எங்கே வளரும் என்பது மன்னருக்குத் தெரியும். ஒருவேளை எனக்குத் தெரி யாமல் இருக்கலாம், அம்மா ! காரணம், நான் உன் அண்ணன் அல்லவா ? கண்கள் குற்றம் செய்து விட்டால் இமைகள் தண்டிக்க முடியாது அல்லவா ?" என்றான் செங்கணான்.

வாயை மூடிக்கொண்டு அவன் பின்னாலேயே போனாள் அவள். "என்ன அண்ணா பேசப் போகி றாய் ?" என்று திடீரென்று கேட்டாள், பேசுவதற்கு என்ன இருக்கிறது என்று. "எப்போது திருமணத்தை வைத்துக் கொள்ளலாம் என்றா ? இங்கேயே வைத்துக் கொள்ளலாமா அண்ணா !" என்றாள் அவள்.



"பார்த்தாயா ? இதற்கு மேல் நான் என்ன பேச வேண்டும் உன்னோடு. நீ நேரே வீட்டுக்குப் போ. நான் மண்டபத்துக்குப் போகிறேன்."

"ஏன் ? அண்ணா நானும் மண்டபத்துக்கு வருகிறேனே..." என்றாள் அவள்.

"நீ மண்டபத்திற்கு வந்து இனி என்ன ஆக வேண்டியிருக்கிறது. ஆக வேண்டியவை அனைத்தும் ஆகிவிட்டது. இனி ஆகவேண்டியது ஒன்றுதான். வேண்டுமானால் நீயும் வா!" என்றான் அவன்.

"ஏன் அண்ணா, இப்படியும் அப்படியும் பேசு கிறீர்கள். நானும் வருகிறேன்" என்று இருவருமாக மண்டபத்தை நோக்கி விரைந்தார்கள்.

மண்டபத்துக்குள் அவர்கள் நுழைகின்றபோது, அங்கேயும் இந்தப் பேச்சுதான் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

பாரி மன்னர், வானவரையனைப் பார்த்து, "உண்மையைச் சொல் ! அப்படியென்றால் நான் உடனேயே பேசி முடிக்கிறேன்" என்று இறுதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"அவரும் சொல்ல வேண்டியது இல்லை, இவ ளும் சொல்ல வேண்டியது இல்லை. எல்லாம் உண்மை தான். இனி பேச வேண்டியது தான் பாக்கி" என்றபடி உள்ளே வந்தான் செங்கணான்.

"நல்லது. நான் பேசட்டுமா, நீங்கள் பேசு கிறீர்களா ?" என்றார் பாரி மன்னர்.

"நீங்களும் பேசுங்கள்! நாங்களும் பேசுகிறோம்'' என்று சிரித்தான் செங்கணான்.

செங்கணான், வானவரையன் அருகில் சென்று, "தளபதியாரே! அப்படியொன்றும் என் தங்கை இடந்தவறி, முறை தவறி, காதலித்து விடவில்லை. அவளுக்கு புரிகிறது! மரபு தெரிகின்றது! ஒரு தளபதியின் தங்கை, இன்னொரு தளபதியைத்தான் காதலிக்க வேண்டுமென்று! அதனால்தான், ஒரு தளபதி கண்ணுக்குத் தெரிகிற வரையிலும் காத்திருந்து, ஆடி பதினெட்டு வரும் வரையிலே பொறுத்திருந்து, அவனைத் தண்ணீரிலே குதிக்க வைத்து, தானும் பின்னாலே குதித்து வந்து இந்தக் காதலைச் செய்து முடித்திருக்கிறாள்'' என்றான் அவன்.

சிரித்தபடி நின்ற வானவரையன், "நல்லது. நீங்கள் எப்படி முடிவு செய்கிறீர்களோ, அப்படியே'' என்றான்.

இருவரும் கண்ணாலேயே பார்த்துக் கொண்டார்கள்.

நாளை நிச்சயிப்பதற்காக, பாரி மன்னர் மாலையிலே சோழ மன்னரைச் சந்திப்பதாகச் சொல்லி அனுப்பினார்.

தளபதி வானவரையர் உறந்தையிலேயே திருமணம் முடித்துக் கொண்டு விட்டாராம் என்ற செய்தி, பாரி மலை நாடெங்கும் பறம்பு மலை மேகங்கள் எங்கும் பரவியாகி விட்டது.



மலைத் தோட்டங்களுக்கு நடுவிலே, குளிர்ந்த சூழ்நிலையிலே நடைபெற வேண்டிய அந்தத் திருமணத்தை காவிரிக் கரையிலே நடத்தி விட்டாரே! ஏன்? என்று கூட அங்கிருந்த மங்கையரும், காளையரும் ஆச்சரியப்பட்டார்கள்.

தளபதி வானவரையரை மணம் முடிக்க வேண்டும் என்று காத்திருந்த இளம் மங்கையர் பலர் இது குறித்து வாடினார்கள், வதங்கினார்கள்!

நம்முடைய காதலை முன்கூட்டியே அறிவிக்காமல் போனோமே என்று கலங்கிய கன்னியரும் உண்டு. திருமணம் முடிந்ததாகச் செய்தி வந்து விட்டது. அவர்கள் இன்னும் வரவில்லையே என்று கலங்கினாள் ஒருத்தி.

"யாராம் அந்தக் கதலி? எப்படி இருப்பாளாம்? பேரழகியாமே...'' என்று, கேள்விக் கணைகளைத் தொடுத்தாள் ஒருத்தி!

"அது என்னவோ, இதுவரையிலும் இந்த மண்ணிலே தோன்றிய மங்கையரில் அப்படி ஒரு பெண் பிறந்தது இல்லையாம்'' என்று தன் ஆச்சரியத்தை பத்து மடங்கு அதிகமாகக் காட்டிக் கொண்டாள் இன்னொருத்தி.

கார் மேகங்கள் குடை பிடிக்கவும், வெண் மேகங்கள் ஆலவட்டம் வீசவும் தயாராக நின்று கொண்டிருந்தன.

பறம்பு மலையின் இலை வள்ளிக் கிழங்கு களிடையே ஓடுகின்ற அணில்கள்கூட இது பற்றியே பேசுவதுபோல தோன்றிற்று பறம்புமலை மாதருக்கு

அந்த வாழைத் தோட்டத்து கிளிகள் எல்லாம் வாழ்த்துரைக்கத் தயாராக நின்று கொண்டிருந்தன.

அது ஒரு தளபதியின் திருமணமாக அல்லாது இளவரசரின் திருமணமாகவே கொண்டாடப் பட்டது பறம்பு மலையெங்கணும்.

அதோ! அந்த மாவடிச்சுனை, புதியதோர் பளிங்கு மேனியைக் குளிப்பாட்டப் போகிறோம் என்று உற்சாகத்தில் தாவித் தாவி விழுந்தது.

திருமணம் ஆன செய்தி வந்ததில் இருந்து பறம்பு மலையின் பல இல்லங்களில், பெரும் மூச்சே, மூச்சாக எழுந்து கொண்டிருந்தது, பல மங்கை யரிடம்.

'மலை மாதரிடம் என்ன குறையென்று, திலப் பரப்பில் பெண் எடுத்தான், வானவரையன்' என்று அமைச்சர்கள் கூடப் பேசிக் கொண்டார்கள்.

எந்த நாளிலும் பறம்பு மலை மக்கள் கொள்வ தும், கொடுப்பதும், தங்களை யொத்த மலைவாழ் மக்களிடமே, அல்லது வேளிர் குலத்தில் மட்டுமே. அந்த மலைக்கு இது ஒரு புதிய கதை தான்.

மலை வாசத்திலோ, மலை அடிவாரத்திலோ, வாழ்ந்து பழக்கம் இல்லாத ஒருத்தி அங்கே வந்து



சேரப் போகிறாள். அவளை மலைவாசி ஒருவர் கொண்டு வரப்போகிறார். இரண்டு பேரும் அழகான வர்கள், காதலித்து திருமணம் செய்து கொண்ட வர்கள்.

அந்தச் சிறிய குன்று, இப்படி போர்க்களப் பட்ட போது, அந்த மலையின் அடிவாரத்தில், ஓர் அழகான புரவி, மலையின் மீது ஏற ஆரம்பித்தது. அந்தப் புரவியில் அமர்ந்திருந்தவன், ஒரு தூதுவன். அவன் அந்த மலையில் இருந்து, பாரி மன்னனோடு சோழ மண்டலம் சென்றவன்.

மலையின் உச்சியில் இருந்து, அந்தப் புரவியின் வருகையைப் பார்த்துக் கொண்டிருந்த மங்கையர் பலரும், காளையர் பலரும் ஏதோ செய்தி வருகிறது என்பதை உணர்ந்தார்கள்.

செய்தி வரும் போது தான் புரவி அந்த வேகத் தில் வரும். அந்தப் புரவியுடைய வருகை அவர் களுக்கு அறிவித்த செய்தி ஏற்கனவே அவர்கள் அறிந்திருந்த செய்திதான்.

ஆனாலும்கூட இன்னும் ஏதாவது அதிலே புதுமையிருக்கலாம் என்று எண்ணியவாறு அவனு டைய வருகையை ஆவலுடன் எதிர்பார்த்து அரண்மனை முற்றத்தில் அவர்கள் காத்திருந்தார் கள். வேறு என்ன செய்தி? அதே செய்திதான்.

திருமணம் முடிந்துவிட்டது—தளபதிக்கு! வந்து கொண்டு இருக்கிறார்கள்—பாரி மன்னரும் மற்றவர்

களும் ; மணமக்களை வரவேற்க, மலை தயாரா கட்டும் என்பதே மன்னரது மடலாக அமைந்து இருந்தது.

சோழ மண்டலத்திலிருந்து, மணமகளது உறவினர்கள் நூற்றிருவர் வருகிறார்கள். அவர் களையும் வரவேற்று உபசரிக்கத் தயாராக இருக்க வேண்டுமென மன்னவர் எழுதியிருந்தார்.

அந்த மடலைக்கொண்டு வந்த தூதுவன் அதில் உள்ள செய்தியை மட்டும் சொல்லிவிடவில்லை. மேலும் சில விளக்கங்களையும் சொன்னான்.

"புதிய புதிய வாழைத்தார்களைக் கொண்டு வந்து நிரப்புங்கள். புதிய தேனை எடுத்து வாருங் கள். புதிய பலாப்பழங்களைச் சேகரியுங்கள். பழந் தேன் எங்கிருந்தாலும் அவற்றைப் பத்திரப்படுத்தி வையுங்கள். புதிய பழங்கள் பறித்துக்கொண்டு வந்து சேருங்கள். இலை வள்ளிக் கிழங்குகளைப் பறித்துக் கொண்டு வந்து அவற்றை நறுக்கிப் பத்திரமாக வைத்திருங்கள் ! வருகின்ற மணமக்களுக் கும், அவர்களைச் சார்ந்த உறவினர்களுக்கும், மலை எப்படிப்பட்டது என்பதை காட்டியாக வேண் டும். மலையிலே கொடுப்பவன் மட்டுமில்லை, இந்த மலையே கொடுக்கின்ற மலைதான் என்பதை, அவர்கள் அறியவேண்டும்"-இந்த விளக்கத்தையும் அவன் கூறினான்.

போட்டி, பொறாமை, களவு சூச்சு, நீங்கிய மாதர்கள் பலர் அந்த வேலையிலே ஈடுபடத் தொடங் கினார்கள். ஏராளமான பொருட்கள் சேகரிக்கப்



பட்டன. ஏராளமான பொருட்களைக் கொண்டு வந்து அரண்மனையிலே குவித்தார்கள், அரண்மனை வீரர்கள்.

பாரி மன்னரும், பாரி மகளிரும், மணமக்களும் ; மலையின் உச்சிக்கு வந்து சேர்ந்தபோது, முழவு ஒலித்தது ! பெருங்கூட்டம் குலவியிட்டு வாழ்த்தியது ! "பாரி மன்னர் வாழ்க !" என்ற குரல் எங்கும் எழுந்தது ! "மணமக்கள் வாழ்க ! வளர்க ! நூறாண்டு வாழ்க !" என்று முதியவர்கள் வாழ்த்தி னார்கள்.

வந்த மணமக்களில் கதலி, மிகவும் உற்சாகமாக காணப்பட்டாள்.

நிலப்பரப்பிலே காவிரி அருகிலே இருந்த காலத்தைவிட, அவள் இன்னும் பிரகாசமாக இருந் தாள். இந்த மலையே எனக்கு உகந்த மலை என்பதுபோல மலையின் ஒவ்வொரு பகுதியிலும் நின்றபடியே அவள் பார்த்தாள். இது நம்முடைய மலை, நாம் வாழப்போகும் மலை, இனி இதுவே நமது தாயகம் என்கின்ற எண்ணங்களெல்லாம் அவள் உள்ளத்தில் ஓடத் தலைப்பட்டன.

பாரி மகளிர் இருவரும் பக்கத்தில் நின்று கொண்டு, "இந்த மலை உனக்குப் பிடிக்கிறதா ?" என்று கேட்டார்கள்.

"நான் தான் முன்பே சொன்னேனே, எது புகுந்த இடமோ அந்த இடமே தாயகம் என்று" என்றாள் கதலி.

பறம்பு மலை பவுர்ணமி காலத்தில் பேரழகாகத் தோன்றும். அது வசந்த காலம், பவுர்ணமி நேரம்.

அந்த இரவில், மணமக்களுக்கு, மலையின் வெளிப்புறத்திலேயே வரவேற்புத் தரப்பட்டது.

சோழ மண்டலத்தில் இருந்து அவர்கள் கூடவே வந்த புலவர்கள் எல்லாம் வாழ்த்திசைத்தார்கள். அவர்கள் மணமக்களைத் தவற விட்டுவிட்டார்கள். முற்றிலும் பாரியைப் பற்றியே பாடினார்கள். இடையிடையே பாரி மணமக்களை நினைவு படுத்திக் கொண்டேயிருந்தார்.

மலையின் வெளித்தோற்ற விருந்திலே, கை நிறைய எடுத்த தேன் முழங்கை வழியே வழிய வழிய அதை உண்டு சுவைத்துக் கொண்டிருந்தார்கள் விருந்துக்கு வந்தவர்களும், மலை வாழ் மக்களும்.

அந்தத் தேனைத் தாங்கள் சுவைப்பதை மணமக்கள் காணவேண்டும் என்பது போல் அவர்கள் ஆசைப்பட்டார்கள்.

இப்படித்தானே உங்கள் வாழ்க்கை அமையப் போகிறது என்பதும், அதிலே மறைந்து நின்ற கருத்தாகும். அதைப் பார்த்துப் பார்த்து சுவைத்த மணமக்கள், நள்ளிரவில், பாரி மன்னரால் கொண்டு விடப்பட்டு, தங்கள் இல்லம் சேர்ந்தார்கள்.

வானவரையனது இல்லம் மலைவாழ் மக்களின் இல்லத்திலே சற்றுப் பெரிய இல்லமாகும். குளிருக்கு அடக்கமான பலபகுதிகள் அதிலே உண்டு. ஒவ்வொரு பகுதியாகப் பார்த்துக்கொண்டு வந்தாள் கதலி.



உச்சியில் இருந்து பார்த்தால் நிலப்பரப்பு தெரிகின்றபடி அதன் அமைப்பு இருந்தது. அது கட்டப்பட்ட இடமும் அப்படியேயிருந்தது அதைப் பார்த்துக்கொண்டே வந்தபோது, வானவரையனது உடன் பிறந்தாளும் பெற்றோரும் அவளை வரவேற்றார்கள்.

"பெற்றோரும், உடன்பிறந்தோரும், இல்லாமலேயே நாங்கள் திருமணத்தை முடித்துக்கொண்டு விட்டோம். இது ஒரு தவறுதான். எங்கள் வாழ்க்கையிலே மறக்க முடியாத, மன்னிக்க முடியாத தவறு தான். ஆனால், சில மகத்தான காரியங்கள் அவசரமாக நடைபெற்று ஆக வேண்டுமென்று வரும்போது, சில ஒப்புதல்களை, ஒப்புரவுகளை நீக்கிவிட்டே பார்க்க வேண்டி இருக்கிறது" என்று மன்னிப்புக் கோரினாள் கதலி.

"தவறு இல்லை, அம்மா! என் மகன், மலையில் இருந்து கீழே இறங்கும்போது, இப்படி ஒரு அற்புதமான கனியொன்றினைக் கொண்டு வருவான் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. அந்தக் கனியை அவன் கையிலே எடுக்கும்போது, நாங்கள் கூட இல்லையே தவிர, அவன் அதைச் சுவைக்கும் போது, இந்த இல்லத்தில்தானே சுவைக்கப் போகிறான். அவர்கள் வாழ்க்கை இங்கேதானே நடைபெறப் போகிறது. அதுவே எங்களுக்கு மகிழ்ச்சி தரத்தக்க ஒன்றாகும்" என்றார்கள் அவர்கள்.

கனமான மரங்களால் அமைக்கப்பட்ட ஓர் அறை. அதன் நடுவிலே, மிகப் பெரிய ஒரு மஞ்சம். அதன் மீது மயில் இறகுகளாலேயே தைக்கப்பட்டு

இருந்ததால் பஞ்சணை என்ற வார்த்தை அதற்குப் பொருந்தாதுதான். ஆனாலும், பஞ்சைவிட அது மென்மையாக இருந்தது.

சுற்றிலும் இருந்த சாளரங்களில் மெல்லிய துணி விளையாடிக் கொண்டிருந்தது.

அது, வானத்து நிலவின் ஒளிதான் சாளரத்தை வட்டமிடுகிறதோ என்பது போலத் தோன்றிற்று.

நிலவினுடைய ஒளி, அந்தச் சாளரத்துத் திரைச் சீலைகளில் பட்டு, உள்ளே வந்தபோது, அது இன்னும் புதுமையான வெள்ளித் தகடாக ஜொலித்தது.

அந்த ஒளியில், கதலியினுடைய மேனி இன்னும் பன்மடங்கு ஒளிவீசுவதை, அவன் கண்டான்.

அந்த மஞ்சத்தில் அவன் சாய்ந்தபோது, அவள் பக்கத்தில் அமர்ந்தாள்.

புதிய அனுபவத்திற்கு இரண்டு பேரும் தயாரானார்கள். பக்கத்தில் அமர்ந்த அவளை, அப்படியே கையோடு எடுத்து, அணைத்து, தன் மார்பகத்தில் சேர்த்துக் கொண்டான், அவன்.

மெல்லிய பூப்போன்ற அந்த உடலும் அந்த இதழ்களும் அவனுடைய உடலோடு ஐக்கியமான போது, இணைந்து நின்றபோது, அவற்றில் இருந்து,



ஒரு புதிய காந்த சக்தியே உருவாகி வெளியேறுவது போல் அவனுக்குத் தோன்றிற்று.

மெதுவாக வீசிய தென்றல்காற்று, குளிரைத் தான் கொண்டு வந்தது என்றாலும், உடம்பிலே இருந்த சூடு அந்தக் குளிரையும் சூடாக்கிற்று.

இருவரும் பக்கம் பக்கமாகப் பள்ளிகொண்டார்கள். அப்போதுதான் உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை, கதலியின் அழகை அவன் முழுமையாக அனுபவித்தான்.

ஒரு நீண்ட வாழைத்தண்டை, சேலை சுற்றிப் போட்டு இருப்பதாகவே அவனுக்குத் தோன்றிற்று. முழுக்க முழுக்க ஒரு மேனி, இப்படி தங்கத்தால் செய்தது போல அமைவது என்பது எல்லோருக்கும் வாய்ப்பது இல்லை. அப்படி ஒரு பெண்ணுக்கு வாய்த்து, அவளே தனக்கும் வாய்த்து விட்டால்— அவனைப் போன்ற பேறு பெற்றவனாகவே அவன் கருதிக் கொண்டான்.

அவளது பொன் போன்ற அங்கங்களை அவன் தீண்டும் போதெல்லாம், அவளாலே அமைதியாகப் படுத்திருக்க முடியவில்லை. அவள் துள்ளியதிலும் துவண்டதிலும், கால்களைத் தேய்த்துக்கொண்டதிலும் ஒரு புதிய உற்சாகத்தையும், புதிய ரசனையையுமே அவன் கண்டான்.

மனிதன் அடையக்கூடிய இன்பங்களில் எல்லாம் பெரும் இன்பம், ஒரு பெண்ணிடம் காணு

கின்ற இன்பம். ஆனாலும், ஏனோ அதற்கு சிற்றின்பம் என்று பெயர் வைத்தார்கள் ! ஒரு பெண் அடையக்கூடிய இன்பங்களில் எல்லாம் மிகச் சிறந்த இன்பம் அவளுக்கு மனம் விரும்பிய காதலன் தருகின்ற இன்பம்.

அந்த இரண்டு பேரும், மனமொத்த வாழ்க்கையை அனுபவித்து முடித்தபோது, பொழுது "நான் புலரட்டுமா ?" என்று கேட்டுக்கொண்டே, வெள்ளியை தூக்கி விளக்காகக் காட்டிற்று.

# 6

"முல்லைக்குத் தேர் கொடுத்தாராமே பாரி வள்ளல், அந்த முல்லைக்கொடி எங்கிருக்கிறது ? உயர்ந்த வாழ்க்கையையும் மன்னவனுடைய வரவேற்பையும் பெற்ற அந்தக் கொடியினை நான் காணவேண்டும்" என்றாள் கதலி.

"அந்த முல்லைக்கொடி நன்றி மறக்காமல் நாள் தோறும் பூத்துக் கொண்டிருக்கிறது. போய்ப் பார்க்கலாமே !" என்றான் வானவரையன்.

இருவரும் தேர் ஏறி அங்கு சென்றார்கள். ஏழு ஆண்டுகளுக்கு முன்னே நடைபெற்ற அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, அடிக்கடி அரண்மனையினுடைய ஆட்களும் வெளியில் இருந்து வருவோரும் அதனைப் பார்த்து வந்த காரணத்தால், அந்த இடம் திருவிழாக் கோலம் கொண்டு காட்சி அளித்தது.

முல்லை, தேரின்மீது நின்று கம்பீரமாகச் சிரித்தது. அந்தத் தேரைச் சுற்றிலும் அது படர்ந்து கிடந்தது. தேரையே மறைத்துக் கொண்டிருந்தது. மறைத்துக் கொண்டிருந்த முல்லைக்கொடியை விலக்கிக் கொண்டு உள்ளே மன்னவர் அமருகின்ற சிங்காசனத்தைப் பார்க்க வேண்டும் போல் அவளுக்குத் தோன்றிற்று. தானே அமர்ந்து செலுத்து

கின்ற அந்தத் தேரை எவ்வளவு உயர்ந்த உள்ளம் இருந்திருந்தால் மன்னவர் ஒரு கொடிக்குக் கொடுத்திருப்பார்! அந்தக் கொடிக்கு அழகான பந்தல் அமைந்திருந்தாலே போதும். ஆனால், அந்த நேரத்தில் பந்தல் அமைக்க ஆளைத் தேடாது, தான் அமர்ந்திருந்த தேரையே கொடுத்தாரே மன்னவர்! இவர் அல்லவா வள்ளல்" என்று எண்ணியபடி, அந்தத் தேரைச் சுற்றிச் சுற்றி வந்தாள் கதலி.

தேரினுடைய ஒவ்வொரு பகுதியையும் பார்த்தாள். அதன் நான்கு சக்கரங்களும் பூமியோடு ஒன்றி ஒட்டிக் கொண்டு நிற்பதனைக் கண்டாள். அந்தத் தேரைத் தொட்டு வணங்கினாள்.

"மன்னவன் முல்லைக் கொடிக்குத் தேர் தருகின்றான். ஆயின், அவனது உள்ளம் எவ்வளவு மென்மையானது. எவ்வளவு கலைத்தன்மை பொருந்தியது. அதிலே வள்ளல் தன்மை மட்டுமில்லை, ஒரு கலைஞனுடைய உயர்ந்த மனப்பான்மை அடங்கியிருக்கிறது."

மன்னவன் பாரி, உயர்ந்த கலைஞன். அவன் தன் மனையாட்டி இறந்ததற்குப் பிறகு மறு வாழ்க்கை இல்லாமல் தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்கிறானே, அதுவும் எவ்வளவு பக்குவமானது. எல்லாவற்றையும் அந்த ஒரு சில நேரங்களில் சிந்தித்தபடியே சுற்றிச் சுற்றி வந்தாள் கதலி.

"நீ எத்தனை தடவை சுற்றிப் பார்த்தாலும், பார்க்கப் போவது ஒரே ஒரு தேரைத்தான்" என்றான் வானவரையன்.



அந்தத் தேரையே பார்த்து முடித்துவிட்ட பாவனையில், 'வேறு ஏதேனும் நான் பார்க்க வேண்டிய இடம் இருக்கிறதா?' என்று கேட்டாள் கதலி.

"இந்த மலை நாட்டில் எல்லாமே நீ பார்க்க வேண்டிய இடம் தான்; எங்களுடைய மன்னவரைத் தாலாட்டுவது போல் அமைந்து இருக்கின்ற இந்த மலை ஒவ்வொரு நாளும் உணவூட்டி, உயிரூட்டிக் கொண்டு இருக்கிறது. இந்த மலையிலே வாழ்கின்ற மக்கள் குறைந்த ஆயுளில் சாவதில்லை. குறைந்த அளவு அவர்கள் நூறாண்டு காலமாவது வாழ்ந்தே முடிக்கின்றார்கள். மிகச் சிறிய வயதிலேயே இறந்து போவோர் இந்த மலையிலே குறைவு, தெரியுமா உனக்கு?" என்றான் அவன்.

"போர் இல்லாமல் நாடு அமைதியாக இருக்குமானால், அந்த அமைதியான சூழ்நிலையில், மக்கள் நீண்ட நாள் வாழ முடியும். அதிலேயும் மலைவாழ் மக்கள் வாழ முடியும் என்று நானும் நம்புகிறேன்" என்றாள் கதலி.

இருவரும் அந்த மலை முழுவதையும் சுற்றிப் பார்த்தார்கள். மாவடிச்சுனைக்கு அவர்கள் சென்ற போது, 'என்னிடம் கொஞ்சம் குளிக்க மாட்டாயா?' என்று கேட்பது போல் அந்த மாவடிச்சுனை மேலும் கீழுமாக அசைந்து அசைந்து ஆடிற்று.

"நான் இதிலே குளிக்கட்டுமா" என்று கேட்டாள் கதலி.

"நீ குளி, நான் பார்த்துக் கொண்டு இருக்கிறேன்" என்றான் அவன்.

"இதென்ன வேடிக்கை, நீங்கள் சற்று மறைவாக இருந்தால் தானே, நான் குளிக்க முடியும்!" என்றாள் கதலி.

"கணவனுக்கு மனைவி மறைவாகவும், மனைவிக்குக் கணவன் மறைவாகவும் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அது மற்றவர்களுக்கு மத்தியிலேதான். இங்கு தாராளமாக நீ குளிக்கலாம்" என்றான் வானவரையன்.

"இது நன்றாக இருக்கிறது! எந்தக் குலமங்கையும் அதற்கு ஒப்பமாட்டாள். அவளுக்கு வயதே ஆகிவிட்டால் கூட, கடைசி வரையிலே கணவனுக்கு முன்னே நாணமுற்றவளாகத்தான் இருப்பாள். எங்கே கொஞ்சம் மறைந்திருங்கள்" என்றாள் அவள்.

அவன் மறைந்திருக்கிறேன் என்று சொல்லிவிட்டு மரத்தின் பின்னாலே போய் உட்கார்ந்தான்.

ஆடைகளைக் களைந்து, நீரிலே தலையை நீட்டினாள் கதலி.

அடிக்கடி அவன் தன்னைப் பார்த்து விடுவானோ என்பது போல் பயந்தபடி, இந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தாள். இவனும் மெதுவாக அவளைப் பார்க்கவேண்டும் போல் எட்டி எட்டி பார்த்துக்கொண்டிருந்தான். "சே! சே! என்ன



இது? நீங்கள் கொஞ்சம் எழுந்து போய்விடுங்கள். நான் மெதுவாக நடந்தே வந்து விடுகிறேன்" என்று நாணத்தோடு சொன்னாள் கதலி.

"சரி, நான் போய்விடுகிறேன்!" என்று சத்தம் போட்டுக் கொண்டே எழுந்து அவன், நேரே அவள் குளித்துக் கொண்டிருக்கும் இடத்தை நோக்கி வந்தான்.

"அய்யோ, அய்யோ! என்ன இது" என்று பதறிப்போய் துடித்தாள் அவள்.

"நான் போய்க் கொண்டு தானே இருக்கிறேன்" என்றான் அவன்.

"அய்யோ! நீங்கள் வந்து கொண்டு அல்லவா இருக்கிறீர்கள்" என்று கதறினாள் அவள்.

"நான் வந்தால் என்ன, போனால் என்ன, நான் பார்க்க வேண்டிய உடல்தானே இது! என்னைத் தவிர இந்த மலையும் பார்க்கும்போது, இந்த மரங்களும் பார்க்கும் போது, இந்தச் சுனையும் தழுவும் போது, எனக்கு மட்டும் அந்த உரிமை இல்லாமல் போய் விடுமா?" என்று தானும் ஆடைகளைக் களைந்து குளிப்பதற்கு இறங்கினான் அவன்.

நாணம் தாங்காத கதலி, ஓடிப்போய் தனது ஆடைகளை எடுத்து, தன்னை மறைத்துக்கொண்டு, "நீங்கள் எப்படி வேண்டுமானாலும் குளியுங்கள், நான் உண்மையில் மறைந்தே இருக்கிறேன்" என்று மரத்தின் பின்னே வந்து உட்கார்ந்தாள்.

அவனும் நன்றாகக் குளித்த பிறகு, இருவரும் ஆடைகளை மாற்றிக் கொண்டு, அங்கிருந்து புறப் பட்டார்கள்.

"எவ்வளவு இனிமையான சூழ்நிலை; எவ்வளவு அற்புதமான மலை! இந்த வாழ்க்கை யாருக்கு அமைகிறதோ, அவர்கள் உண்மையிலேயே நீண்ட நாள் வாழத்தான் செய்வார்கள்" என்று வியந்து கொண்டே வந்தாள் கதலி.

"இந்த மலை மட்டும் அழகல்ல, இந்த மலைக்கு நீ வந்ததே தனி அழகு! என்னுடைய வாழ்க்கையில் இனிமேல் நான் கோழை ஆகிவிடு வேனோ என்று நான் அஞ்சுகிறேன். ஏனென்றால், ஒரு பெண்ணினுடைய கடைப்பார்வை படும் பொழுது தான் மனிதனுடைய உள்ளத்து வீரங்கள் எல்லாம் ஒடுங்கி விடுகின்றன. அந்த வீரம் முழுவதும், மனைவியினுடைய காதலில் ஐக்கியப் பட்டு விடுகிறது. அதன் விளைவாக அவன் வாள் தூக்குவதற்குக்கூட அஞ்சுகிறான்" என்றான் வானவரையன்.

"நீங்கள் சொல்வது தவறான தத்துவம். எப்போது நல்ல மனைவி வாய்த்துவிடுகின்றாளோ, அப்போது வீரன் இன்னும் பல மடங்கு வீரனாகி விடுகிறான். என்னுடைய வருகையும், என்னுடைய வாழ்க்கையும், உங்களுடைய அரவணைப்பும், எனக்குக் கிடைத்ததும், எந்த நேரத்திலும் உங்களை மேலும் மேலும் வீரனாக்குமே அல்லாது கோழை ஆக்காது" என்றாள் கதலி.



"என்னை அவை வீரனாக்குமானால், அந்த வீரம், இந்த மலையைக் காக்கவே பயன்படும்" என்றான் அவன்.

"இந்த மலையை நீங்கள் காக்கும்போது, அதைக் காக்கக் கூடிய திறனோடுதான் நானும் வந்திருக்கிறேன்" என்றாள் அவள்.

"நான்தான் பார்த்தேனே, காவிரி நதியை எதிர்த்து நீச்சலிடவும், அடித்துக் கொண்டு போகிற ஓர் ஆடவனைத் தானே தூக்கி வருகிறேன், என்று சொல்லிவிட்டு நதியிலே விழவும், உனக்கு அவ்வளவு துணிச்சல் இருக்கும்போது, இந்த மலை என்ன, இதுபோன்று பத்து மலைகளைக் காப்பாற்றக் கூடிய துணிவு உனக்கு உண்டு என்பதை நான் நன்கு அறிவேன்" என்றான் அவன்.

"நாம் இருவரும் ஒருவரை ஒருவர் புகழ்ந்து கொண்டேயிருந்தால், அது நன்றாக இருக் கிறதா?" என்று இடைமறித்துக் கேட்டாள் கதலி.

"அதிலேதானே சுகமே இருக்கிறது!" என்றான் அவன்.

"இப்படி தினசரி புகழ்ந்து கொண்டே இருந் தோமானால் வாழ்க்கை மிகச் சீக்கிரத்தில் முடிந்து விடும். அதனாலேதான், இலக்கியத்திலே 'ஊடல்' என்று ஒன்றை வைத்தார்கள். இங்கே நான் கொஞ்சம் கோபம் கொள்கிறேன். நீங்கள் கொஞ்சம் வேகமாகப் போங்கள், பார்க்கலாம்...!" என்றாள் அவள்.

"ஐயையோ! கோபம் கொண்டால், நான் சரணாகதி அடைந்து விடுவேன்" என்றான் அவன்.

"யார் சரண் அடைகிறார்களோ, யார் ஊடலில் தோற்று விடுகிறார்களோ, அவர்களே வென்று விடுகிறார்கள் என்பது திருக்குறள் அல்லவா!" என்றாள் அவள்.

"ஆமாம்! அறியாமல் போனேன்! நானே தோற்றுவிடுகிறேன்" என்றான் அவன்.

"இல்லை, இல்லை; நான்தான் தோல்வி அடைவேன்!" என்றாள் அவள்.

"தோல்வி அடைவதில் இவ்வளவு போட்டியா?" என்று கேட்டான் அவன்.

"தோல்வி அடைந்தால்தானே கூடல் சுகமாக இருக்குமாம்" என்றாள் அவள்.

இருவரும் இல்லத்துக்குள் நுழைந்தபோது, "இது பட்டப் பகல்" என்பதனை அவனுக்கு நினைவுபடுத்தினாள், அவள்.

"புதிதாகத் திருமணம் ஆன தம்பதிகளுக்கு பகலுமில்லை இரவுமில்லை" என்று கதவைச் சாத்தினான் அவன்.

# 7

காலங்கள் சென்றன!

பாரியின் பறம்பு மலை மட்டுமல்லாது, சேர சோழ பாண்டிய மண்டலங்களும் அமைதியாகவே இருந்தன. போர் முகத்துக்கு தேவையில்லாத ஒரு நிம்மதியும் மக்கள் வாழ்க்கையில் இருந்தது.

வீரர்களின் வாட்களும் வேல்களும் ஆங்காங்கே தூங்கிக் கொண்டிருந்தன. பல ஆண்டுகளுக்கு முன்னாலே படிந்திருந்த குருதி மட்டுமே அதில் இருந்ததே தவிர, புதிய குருதியின் நாற்றம் அந்த வேல்களிலோ, வாட்களிலோ இல்லை.

மாந்தரின் வாழ்க்கை இவ்வளவு அமைதியாக இருக்கவேண்டும் என்றுதான் மன்னர்கள் விரும்பினார்கள். ஆனால், நாள்தோறும் வருகின்ற புலவர்கள் அது சேரன் அவையாயினும், சோழன் அவையாயினும், பாண்டியன் அவையாயினும், எந்த அவையிலும் பாரியைப் பற்றியே பாடத் தொடங்கினார்கள்.

இதுவே, நாட்டுடைய நிம்மதியை கெடுப்பதற்குப் போதுமானதாக, ஒரு புலவனுக்குக்கூட தோன்றிற்று. "நீங்கள் பாரியைப் பற்றிப் பாடப் பாட மற்றவர்களுடைய மன எரிச்சலையே அதிகப் படுத்திக் கொண்டு போகிறீர்கள்" என்று அந்தப் புலவன், மற்றப் புலவர்களை எச்சரித்தான்.

"எவ்வளவு தான் அவர்கள் ஆத்திர முற்ற போதிலும், சொல்ல வேண்டியவற்றை சொல்லிவிட வேண்டியதுதான் பாவலன் வேலை" என்று புலவர்கள் அதை ஒதுக்கி விட்டார்கள்.

எந்த அவையில் போய் நின்றாலும் கூட "பாரி போல், நீயும் வழங்க வேண்டும் மன்னா !" என்று கேட்டார்கள்.

"பாரியைப் போல் நீயும் வாழவேண்டும்" என்று வாழ்த்தினார்கள்.

"பாரியின் நாட்டைப் போல், உன் நாடும் வளர்வதாக" என்றார்கள்.

முன்னூறு கிராமங்களை மட்டுமேகொண்ட ஒரு மலையை, ஒரு மாபெரும் நாடு வாழ்வதற்கு, காரணமாகக் காட்டினார்கள். கேட்கக் கேட்க மன்னர்கள் அனைவருக்கும் கோபமும் மூண்டது. 'என்ன இவனுக்கு இந்த வாழ்வு ?' என்ற போட்டி பொறாமை உணர்வும் மூண்டது.

வானவரையனுக்கும் கதலிக்கும் திருமணமாகி ஆண்டுகள் ஏழு முடிந்த நிலை. அவர்களது வாழ்க்கையும், அமைதியும், இனிமையும் நிரம்பி நீர் நிறைந்த நதி மெதுவாகச் செல்லுவதுபோல் சென்று கொண்டிருந்தது.

அழகான ஆண் குழந்தை ஒன்றுக்கு எடுத்த எடுப்பிலேயே தாயான கதலி, அந்தக் குழந்தைக்கு ஆறு வயதாவதைக் கண்ணால் கண்டு கொண்டிருந்தாள்.



தலைவாரிப் பூச்சூட்டி, அந்த மகனை அழகு பார்ப்பதிலேயே அவள் நேரத்தைச் செலவழித்தாள். இன்னும் ஒரு மகனையோ, மகளையோ, ஈன்றெடுக்க வேண்டும் என்ற எண்ணம் கூட அவளுக்கு இல்லை. தனக்கு இரண்டு மக்கள் இருப்பதாகவே அவள் கருதினாள். ஒன்று தன்னுடைய கணவன். மற்றொன்று, தன்னுடைய மைந்தன். அந்த இரண்டு பேர்களையும் அரவணைத்து அன்பாக கொண்டு செலுத்துவதிலேயே தனது இல்லறம் நடந்தால் போதும் என்று முடிவு கட்டி வாழ்ந்தாள்.

தன் மலை மீது இப்படி ஒரு குலமகள் வாழ்கிறாள் என்பதையே காவியமாகக் கருதினார், பாரி மன்னர்.

பாரியுடைய அவைக்களப் புலவர் கபிலர். இமயம் முதல் குமரி வரை நாடு முழுமையும் சுற்றி விட்டு, அன்றுதான் திரும்பியிருந்தார், பறம்பு மலைக்கு.

ஆண்டுகள் எட்டு கழித்து, அவர் திரும்பி வந்தவுடனே அவரைப் பார்த்தார் பாரி மன்னர். முதன் முதலில் கேட்ட கேள்வி, "நம்முடைய மலைக்கு புதிய மகள் வந்திருக்கிறாளே பார்த்தீர்களா ?"

"மகளா, மலைக்கு வருபவள் மருமகளாகத் தானே இருக்க முடியும்" என்றார் கபிலர்.

"ஏற்கனவே, இருமக்கள் எனக்கு இருக்கிறார்கள். மூன்றாவது ஒரு மகள் வாய்த்திருக்கிறாள் ! அவள் தான் இந்தப் பாரிமலையின் கொடிபோல்

படர்ந்து நிற்கிறாள். கடந்த ஏழு ஆண்டு காலமாக—அவள் வந்ததில் இருந்து, இந்தப் பாரி மலையில் வசந்த காலங்கள் வசந்த காலமாகவும், வெயில் காலங்கள் வெயில் காலங்களாகவும், மழைக் காலங்கள் மழைக் காலங்களாகவும், பருவம் தப்பாமல் இயங்குகின்றன. பத்து நாட்கள் தவறுகின்ற பருவங்கள் கூட இப்போது தப்புவது இல்லை" என்றெல்லாம் புகழ்ந்தார் பாரி மன்னர்.

"நீயே புகழ்கின்றாய் என்றால், அவள் எப்படி இருப்பாள் என்பதை எண்ணிப் பார்க்க என்னால் முடிகிறது, மன்னவா! அவளை நான் பார்க்க வேண்டும்" என்றார் கபிலர்.

அங்கவையும் சங்கவையும் கபிலரிடம் வந்து, "தாத்தா அந்த இடத்திற்கு நாங்கள் உங்களை அழைத்துச் செல்கிறோம்" என்றார்கள்.

"நீங்கள் அழைத்துச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஐயாவைப் பார்க்க நாங்களே வந்திருக்கிறோம்" என்று சொல்லிய படியே உள்ளே நுழைந்தான் வானவரையன்.

"என்ன, வானவரையா! என்ன உனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லையா ?" என்று கேட்டார் கபிலர்.

ஓங்கி சிரித்தார் மாமன்னர் பாரி. "இங்கே, ஒரு மகள் வந்திருக்கிறாள் என்று நான் சொன்ன போதே அது வானவரையன் மனைவி என்று எண்ணிப்பார்க்க உங்களால் முடியவில்லையா ?"



"அவ்வளவு தூரம் என் சிந்தனை ஓடவில்லை. மன்னா! வானவரையனுக்கு அப்படி ஒருத்தி வாய்க்க வேண்டும் என்றுதான் கருதினேனே யொழிய அவனுக்கே இவள் வாய்த்திருப்பாள் என்பதை நான் எண்ணிக்கூடப் பார்க்கவில்லை!"

"இது ஒரு உற்சாகமான நிலைதான். எங்கே இருவரும் பக்கம் பக்கமாக நில்லுங்கள், பார்க்கலாம்" என்று கதலியையும் வானவரையனையும் பக்கத்தில் இருக்கச் சொன்னார். நடுவிலே நின்ற அவர்களது சிறுவன், புலவரது காலில் விழுந்து வணங்கினான்.

"இந்த வயதிலேயே எவ்வளவு பணிவு, எவ்வளவு அன்பு! இந்தக் குழந்தை எதிர்காலத்தில் மிகச் சிறந்த குழந்தையாக இருக்கும்" என்று அவர் வாழ்த்து உரைத்தார்.

அப்போது வெளியிலே ஆரவாரம் கேட்டது. "இவ்வளவு பெரிய ஆரவாரம் வேறு யாருக்கும் எழுவது இல்லையே, அவ்வைப் பிராட்டியார் மீண்டும் வருகின்றாரோ" என்றார் கபிலர்.

"அதை மட்டும் உங்களால் எண்ணிப் பார்க்க முடிகிறதா" என்று கேட்டார் பாரி.

"அவ்வை வரும்போதுதான் இவ்வளவு ஆரவாரம் இருக்கும்" என்றார் கபிலர்.

உள்ளே அவ்வையே நுழைந்தாள். "எப்படிக் கபிலரே உமக்கு அது தெரியும்" என்று கேட்டார் அவ்வை.

"எந்த அவையில் போனாலும் இந்தக் கிழவி தானே முன்னாலே வந்து நிற்கிறாள். மற்றவர் களைப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டு இவள்தானே தன்னுடைய வரலாற்றைப் படைக்கிறாள். அதனால் இங்கே வந்ததும் அவளால் எழுந்த ஆரவாரமாகத் தான் இருக்க முடியும் என்று நான் எண்ணினேன்" என்றார் கபிலர்.

"முருகா! கபில முனிவரது புலமை எனக்குப் புரிகிறது. அவ்வையைப் பற்றி இப்படி ஒரு கருத்தை யாரேனும் ஒருவர் சொல்ல வேண்டும் என்றால், அவருக்கு அளவு கடந்த துணிச்சல் இருக்க வேண்டும். அந்த அளவு கடந்த துணிச்சல் யாருக் கும் வரவேண்டும் என்றால், அவர்கள் பாரியின் பக்கத்தில் இருக்க வேண்டும். அதனாலேதான் கபில மகாமுனி இவ்வளவு துணிச்சலோடு இப்படிச் சொல்லுகிறார்" என்றார் அவ்வை பிராட்டியார்.

"பாருங்கள், மன்னவா!" அவ்வையாரைப் பற்றிப் பேசத் துணிச்சல் வேண்டுமாம்! அவ்வளவு தூரம் அவரது புலமை நிமிர்ந்து நிற்கிறது" என்றார் கபிலர்.

பாரி மன்னர் சிரித்தார்!

அந்தச் சிரிப்புதான், அந்தப் பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி. அடுத்த பேச்சைத் தொடங்குவதற்கு இடையிலே ஒரு சிரிப்பைத் திரையாகப் போடுவது பாரி மன்னர் வழக்கம் அல்லவா!

"தாயே! இதோ, நிற்பது யார் தெரியுமா? கதலி, என்னுடைய மலைக்கு வந்திருக்கும் மருமகள். ஆனால் எனக்கு மகள். வானவரையனின் மனைவி. சோழன் தளபதி செங்கணானின் தங்கை. இப்படி ஒரு குலமகளை, இந்த நாடு எந்தக் காலத்திலும் சந்தித்தது இல்லை. இந்த மலை எந்த யுகத்திலே யும் சந்தித்தது இல்லை" என்று எல்லாம் பலபடப் புகழ்ந்தார், பாரி.



அவ்வையார் அவளையே பார்த்தார்.

மெதுவாகக் கதலியின் அருகிலே வந்த அவ்வையார், "என்னை நன்றாகப் பார். இதற்கு முன்னால் பார்த்திருக்கிறாயா?" என்று கேட்டார்.

"பார்த்திருக்கிறேன் பாட்டி. சோழ மண்டலத் திற்கு நீங்கள் வந்தபோது, நான் உங்கள் அருகி லேயே இருந்திருக்கிறேன். உங்களுக்கு நானே பரிமாறியிருக்கிறேன்."

"இருக்கும்! இருக்கும்! உன்னுடைய பணிவை யும் உன்னுடைய குணத்தையும் பார்க்கும்போது, இந்த மலைக்குக் கிடைத்த பெரும் பரிசு நீதான் என்று எனக்குத் தோன்றுகிறது" என்றார் அவ்வையார்.

தலைகுனிந்தபடியே நின்றாள், கதலி.

"நீங்கள் எதைக் கேளுங்கள் தாயே, அவள் பதில் சொல்ல மாட்டாள். இந்த மலைக்கு வந்து ஏழு ஆண்டுகள் ஆகின்றன. இந்த மலையினுடைய வாழை மரங்களும், அணில்களும், கிளிகளும் பேசிய

அளவு கூட அவள் இதுவரையிலும் பேசியது இல்லை'' என்றார் பாரி மன்னர்.

கபிலர் மீண்டும் அவள் அருகிலே வந்து, "கதலி, மன்னர் உன்னைப் புகழ்வதைப் பார்த்தால், இது வரையிலே என் மீதும், அவ்வையார் மீதும் இருந்த மரியாதை அவருக்குக் குறைந்து வருவது போல தோன்றுகிறது'' என்றார்.

"ஐய்யோ! அப்படிச் சொல்லாதீர்கள். உங்கள் இருவரையும் கொண்டேதான் இந்தத் தமிழ் நிலங்கள் முழுவதும் வாழ்கின்றன'' என்றாள் கதலி.

"ஒருவரை ஒருவர் புகழ்ந்து உரைத்துக் கொண்டிருப்பதிலேயே பொழுது போய்க்கொண்டிருக்கிறது. எல்லோரும் விருந்துக்குப் போகலாம்'' என்றார் பாரி மன்னர்.

"பாரியின் மாளிகைக்கு எம்போது வந்தாலும் விருந்து காத்துக் கொண்டே இருக்கிறது. விருந்து எங்கே காத்திருக்கிறதோ, அங்குதானே போவீர்கள்'' என்றார் கபிலர்.

"ம்! விருந்தோடு அனுப்புகிறானோ இல்லை வெறுங்கையோடு அனுப்புகிறானோ என்னவோ'' என்று நிறுத்தி நிறுத்தி சொன்னார் அவ்வையார்.

"பாரி எப்போதும் வெறுங்கையோடு அனுப்ப மாட்டார்'' என்றார் கபிலர்.

"நீங்கள் இருவருமே பேசி முடித்து, என்னிடம் இருந்து பறித்துக்கொண்டு போவீர்கள் போல் இருக்கிறதே'' என்றார் பாரி.



"முடிந்தால் அதையும் கூடச் செய்வோம், கொடுப்பவனைப் பாடுவதுதான் புலவர்களின் குல வழக்கம்'' என்று சிரித்தார், கபிலர்.

விருந்து நடந்தபோது, கதலியும் அங்கவையும் சங்கவையும் பரிமாறினார்கள்.

புலவர் பெருமக்களைக் காண்பதில் கதலி பெரு மகிழ்வுற்றாள்.

பெரும் பொற்கிழி ஒன்றினை எடுத்து அவ்வையாரின் கையிலே கொடுத்தார் பாரி மன்னர்

"அவ்வைப் பிராட்டியாரே! நீங்கள் இங்கேயே தங்க வேண்டும்'' எனக் கேட்டுக் கொண்டார்.

"மன்னவா! வருகின்ற அனைவரும் இங்கேயே தங்குவதென்றால், இந்த மலை போதாதே'' என்றார் அவ்வைப் பிராட்டி.

"அவ்வையாரைப் போல அனைவரும் இருப்பார்களேயானால், இந்த மலை இடம் கொடுக்கும்'' என்றார் பாரி மன்னர்.

''மன்னிக்க வேண்டும். நான் இங்கிருந்து நேரே திருக்கோவிலூருக்குச் செல்லவேண்டும். அங்கே, காரி மன்னன் எனக்காகக் காத்திருப்பான்'' என்றார் அவ்வையார்.

அந்தப் பொற்கிழியைப் பெற்றுக் கொண்டு, அவ்வையார் செல்லும்போது, பொழுது நன்றாக இருட்டிவிட்டது.

"ஐயோ, இந்த நேரத்தில் அவ்வையார் தனியாக செல்லுகிறார்களே, கூட நீங்கள் செல்லுங்களேன்'' என்றாள் கதலி.

வானவரையன் பாரியைப் பார்த்து, "நானும் போகட்டுமா, மன்னவா" என்று கேட்டான்.

"இல்லை தளபதி, நீ போகவேண்டாம்" என்றார் அவர்.

"என்ன கோபமோ, பாரி மன்னருக்கு" என்று பயந்து கொண்டேயிருந்தாள் கதலி.

அவ்வையார் மலையை விட்டு இறங்கி, காட்டு வழியே சென்று கொண்டிருக்கும் போது, ஒரு காவலன் கூட அவர் துணைக்குப் போகவில்லை.

மடமட வென்று பின்னால் ஒரு புரவி ஓடிவரும் சத்தம் அவருக்குக் கேட்டது.

எந்தப் புரவியென்று திரும்பிப் பார்த்தார் அவ்வையார்.

வேலும் கையுமாக ஒரு வீரன் அதிலே உட்கார்ந்திருந்தான்.

"ஏ! கிழவி, கையில் என்ன? கொடு அந்தப் பையை" என்று வேலைக் காட்டினான்.

"அடப்பாவி! பறம்புக்கு பகலில் மட்டும் தான் அரசா? இரவிலே அரசு இல்லையா? யார் நீ?" என்று கேட்டார், அவ்வையார்.

"எதுவும் பேசாதே, அதை என்னிடம் கொடு" என்று பறித்துக் கொண்டான், அவன்.

பறித்துக்கொண்டு, புரவி திரும்பி ஓடுவதைப் பார்த்தபடி நின்ற அவ்வை, "ச்சீ பாரியுடைய நாட்டிலேயா இவ்வளவு திருட்டும் கயமையும் அவலமும்...? பாரி! பாரி!" என்று கூவியபடி, மீண்டும் மலையில் ஓடினார் அவ்வை.



பாரி அங்கே தூங்கவில்லை. மண்டபத்திலேயே நின்று கொண்டிருந்தார்.

"பாரி மன்னா! உனக்குப் பகலில் தான் செங்கோலா? இரவில் உனக்கு செங்கோல் இல்லையா?"

"ஏன்?"

"நான் போகின்ற வழியில் நீ கொடுத்த பொற்கிழியை, ஒரு திருடன் பறித்தானே! இது உனக்கு வெட்கமாக இல்லையா? எங்கே நல்லரசு இல்லையோ அங்கு தானே கள்வர்கள் மலிவார்கள். நீ நல்லரசு நடத்தவில்லை என்று அல்லவா நிரூபிக்கப்படுகிறது" என்றார் அவ்வை.

"ஆமாம்! நான் நடத்தவில்லை நல்லரசு. நீங்கள் இங்கே இருந்து அந்த அரசை எப்படி நடத்த வேண்டும் என்று கூற வேண்டும் அல்லவா?" என்றார் பாரி.

"நான் இங்கே இருக்க முடியாது!"

"நீங்கள் இங்கே இருக்க முடியாது என்றால், இதுதான் நடக்கும்" என்றார் அவர்.

"நீ ஏதோ, மனதில் களவு வைத்துப் பேசுகின்றாய். இந்தத் திருட்டு நடந்ததற்குக் காரணம் என்ன? யார் திருடியது என்று உன்னால் கண்டு பிடிக்க முடியுமா...?" என்று கேட்டார் அவர்.

"கொஞ்சம் இருங்கள் தாயே" உள்ளே ஓடினார் பாரி. திரும்பி அவர் வந்த போது பார்த்தாள், வேலும் கையுமாக அதே திருடன் நின்று கொண்டிருந்தான்.

"பாரி, நீயா! என்னிடம் திருடியது, ஏன்? உன்னிடம் இல்லையென்றால் கொடுக்காமலேயே

அனுப்பி இருக்கலாமே... ஏன் திருடினாய் ?" என்று கேட்டார் அவ்வை.

"இல்லை, திருடினால்தானே நீங்கள் திரும்ப வருவீர்கள் என்பதற்காகத் திருடினேன்" என்றார் வள்ளல் பாரி.

சிரித்தார் அவ்வையார்.

"எங்கே அன்பு வெள்ளம் கரைபுரண்டு ஓடு கின்றதோ அங்கேதான் மனித உயிர்கள் நீண்ட காலம் வாழ முடியும். நான் இங்கேயே இன்னும் சில நாட்கள் இருந்துவிட்டு விடைபெறுகிறேன் !" என்று அங்கேயே உட்கார்ந்தார் அவ்வையார்.

உட்கார்ந்த அவரை, கைத்தாங்கலாக அழைத்துக்கொண்டு போனாள், கதலி.

"எங்கே அம்மா ?" என்று கேட்டார் அவ்வையார்.

"என்னுடைய இல்லத்திற்கு" என்றாள் கதலி.

"நான் இந்த மாளிகை மண்டபத்திலேயே இருக்கிறேன். இந்த விருந்து எனக்கு ஒத்து வரும். நாளைக் காலையில் மன்னவன் மனம் மாறினால் நான் உடனே திருக்கோயிலூருக்குப் போக வசதி யாக இருக்கும்" என்றாள்.

அவ்வையை அங்கு விட்டு விட்டுச் செல்வதே கதலிக்கு கவலையாக இருந்தது.

வானவரையன், "நாளை நானும் கூடப் போகி றேன். திருக்கோவிலூரில் அவ்வைப் பிராட்டியாரை விட்டு விட்டு வருகிறேன்" என்று வாக்குறுதி அளித்த பிறகுதான் கதலி தன் இல்லம் சென்றாள்.

மன்னவன் பாரிக்கு, ஒரு மன நிம்மதி. அன்றைய இரவை அவ்வையார் அங்கேயே கழிக்கிறார் என்பதிலே...

# 8

நாடெல்லாம் மாதம் மும்மாரி என்றால் நாட்டி லுள்ள புலவர்களின் நாவெல்லாம் நாளுக்கு மூன்று முறை "பாரி பாரி பாரி" என்று கூறிக் கொண்டே இருந்தன.

எவ்வளவு காலத்திற்குத்தான் இந்தப் புகழை மற்றவர்கள் தாங்கிக் கொள்ள முடியும்? தங்களுக்கு இல்லாத புகழ் மற்றவர்களுக்கு வரும்போது, அந்தத் தகுதி உடையவர்கள் தான் அவர்கள் என்றாலும், தகுதியற்றவர்கள், அவர்கள் மீது ஆத்திரப்படுவது இயற்கை.

ஆனால் மாமன்னர்களாக வாழ்ந்த சேரரும் சோழரும் பாண்டியரும் ஒரு மலையவேளைப் பற்றி, புலவர்கள் பேசுகிறார்கள், அவன் மீது இவ்வளவு பாடுகிறார்கள், நாட்டு மக்கள் அனைவருமே அவனைப் போற்றிப் புகழ்கிறார்கள் என்று எண்ணி யெண்ணி நொந்தார்கள்.

வில்லும், புலியும், கயலும் பறக்கும் நாடுகள் இப்படி ஒரு மானக்கேட்டை எப்படித் தாங்கிக் கொள்வதென்று முதன் முதலில் மடல் அனுப்பி யவன் பாண்டிய மன்னன். காரணம், பாண்டிய நாட்டின் உட்பகுதியாகத்தான், மலையவேள் பாரி மன்னன் மலைநாடு இருந்து வந்தது.

பாண்டியனே, சேரனுக்கு ஒரு மடலும், சோழனுக்கு ஒரு மடலும் தீட்டினான்.

சேரன் அதனைக் கண்ணுற்று, ஒரு மடல் தீட்டினான்.

இரண்டு பேருடைய மடல்களைக் கண்ட பிறகு, ஏற்கனவே உள்ளுக்குள்ளேயே புகைந்து கொண்டிருந்த சோழனின் பொறாமை உணர்வு தலை தூக்க ஆரம்பித்தது.

"மீண்டும் பாரி தலைவனென உயர்ந்து விடுவானானால் எவ்வளவு ஞானம் பெற்ற முனிவனும் கூட தாங்கிக் கொள்ள மாட்டானே! என்னால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்? படையெடுப்பைத் தவிர வேறு வழியில்லை" என்று முழங்கினான் சோழ மன்னன்.

எவன் இதுவரை உள்ளத்துக்கு உள்ளேயே மூடி மூடி வைத்தானோ, அவனே இப்போது துடித்தான்.

நீண்ட நாட்களாகவே இப்படி வெடிக்க வேண்டுமென ஆசை கொண்டிருந்தான் பாண்டியன். அவனுக்கு தூபம் போட்டு கொண்டிருந்தவன் சேரன்.

ஆனாலும், அதற்குச் சம்மதம் சொல்லாமல் இருந்தது சோழன்தான். அந்தச் சோழனும் இப்போது சேர்ந்து விட்டதால், படையெடுப்பு தவிர்க்க முடியாததாகி விட்டது.



"செங்கணான், நாம் பறம்பு மலையின்மீது படையெடுக்கிறோம்" என்றான் சோழன்.

"நல்லது மன்னவா" என்று அந்த ஆணையை ஏற்றுக் கொண்டான், செங்கணான்.

ஏற்றுக் கொண்ட மாத்திரத்திலேயே அவனது மனதில் சுருக்கென்று தைத்தது, அங்கே இருக்கின்ற தளபதி தன்னுடைய மைத்துனன் அல்லவா என்று.

ஆனால், போர் என்று வரும்போது, சொந்த பந்தங்களைப் பார்க்க முடியாதே? போர்க்களத்தில் ஒப்பாரி வைக்க முடியாதே? மன்னவன், "போர்!" என்றால், "நடத்துகிறேன்" என்று சொல்ல வேண்டியவன் அல்லவா தளபதி!

அப்படியே சொல்லி விட்டான் செங்கணான்.

"பறம்பு மலையின் மீது போர் என்றால் நாம் தனியாகவே தொடுத்தால் வெற்றி நம் கையில்தான். ஆனால், இதிலே பாண்டியனும் சேரனும் சேர்ந்திருக்கின்றார்கள். போர் என்று படைகள் போனால், மூன்று நாழிகைகளில் பறம்பு மலையைப் பிடித்து விடலாம். அவ்வளவுதான்! சில நாழிகை வேலை தான்" என்று சிரித்துக் கொண்டே சொன்னான் சோழன்.

"நாழிகை ஆனாலும், நாளானாலும், ஆண்டுக் கணக்காகவே ஆனாலும், அதற்கு உடன்பட்டு போரை நடத்தவேண்டியவனே தளபதி. "மன்னவா!

நீங்கள் எப்படி ஆணையிடுகிறீர்களோ அப்படியே நான் நடக்கத் தயார்'' என்றான் செங்கணான்.

''ஆணை என்ன? இதுதான். எப்போது புறப் படப் போகிறோம் என்பதற்கு காலநேரம் தேவை யில்லை. போருக்குப் போகிறவர்கள் கால நேரம் பார்த்தாக வேண்டும் என்றாலும், இதிலே காலநேரம் தேவையில்லை. காரணம், வெற்றி நமக்குத்தான் என்ற முடிவோடு புறப்படுகிறோம். அங்கே போய்ச் சேரும் முன்பே வெற்றி வழியிலேயே வந்தாலும் வரும்'' என்று சிரித்தான் சோழ மன்னன்.

செங்கணானுக்கு உள்ளூர ஒரு திகைப்பு. ''எவ்வளவு உன்னதமான நண்பனாகப் பாரி மன்னனுக்கு விளங்கினார் நமது சோழ மன்னர். அவருடைய மனமே இப்படி ஆகிவிட்டதே? தன்னை விட ஒருவன் உயர்ந்து வருகிறான் என்றால், சாதாரணமான மனிதர்கள் மட்டுமல்ல, சக்கரவர்த்தி களே கூட அப்படித்தான் மாறுவார்கள் போல இருக்கிறது'' என்று, எண்ணி எண்ணி ஆச்சரியப் பட்டான் செங்கணான்.

முதலில் வஞ்சிப் படை உறந்தைக்கு வருவது என்றும், இரண்டு படையும் சேர்ந்து, மதுரைக்குச் செல்வதென்றும், மூன்று படைகளும் சேர்ந்து பறம்பு மலையை முற்றுகை இடுவதென்றும் முடிவாயிற்று.

இந்த மூன்று படைகளுக்கும் பொதுத் தளபதி யாக யாராவது வேண்டாமா?

வேண்டும் என்று சோழன் கருதினான்.



சோழன் யாரை விரும்புகிறானோ. அவனையே வைத்துக் கொள்ளலாம் என்று சேரனும் பாண்டிய னும் அவனுக்கு மடல் எழுதினார்கள்.

மூவேந்தருக்கும் ஒரு தளபதியாக செங்கணான் நியமிக்கப்பட்டான்.

செங்கணானை நியமிக்கவேண்டும் என்பது தான் சோழ மன்னனுடைய விருப்பமாகும்.

செங்கணானின் திறமையில் அவனுக்கு இருந்த நம்பிக்கை மட்டுமல்ல காரணம். 'இந்தக் களத்தில் அவன் எப்படி நடந்து கொள்கிறான்? சோழ நாட்டிற்கு விசுவாசமாகவா? இல்லை, தங்கையை மணம் முடித்துக் கொடுத்த பறம்பு மலைக்கு விசுவாச மாகவா' என்று அறிந்து கொள்ள அவன் விரும்பினான்.

ஆனால், செங்கணான், மிகவும் உறுதியாகவும் நேர்மையாகவும், 'எங்கே நான் தளபதியோ அங்கே தான் விசுவாசம்' என்று முடிவுகட்டிக்கொண்டான்.

முக்கொடி தாங்கிய, சேரநாட்டுப் படைகள் கடல் அலையென உறந்தைக்கு வந்து சேர்ந்தன. இரண்டு கடல்கள் சங்கமித்தது போல் இரண்டு நாட்டுப் படைகளும், மதுரைக்கு வந்து சேர்ந்தன. மதுரையில் மூன்றும் ஒன்றாகக் கலந்தவுடனேயே, பாரி மன்னருக்கு ஒரு தூது அனுப்பப்பட்டது.

மலையிலே பாரி, மூவேந்தரையும் அவமானப் படுத்தும் வகையில் பலமுறை நடந்து கொண்டதாக

வும், ஆயினும் அதுவரையில், தாங்கள் பொறுத்துக் கொண்டிருந்ததாகவும், இனி பொறுக்க முடியாத நிலைஏற்பட்டதால், தாங்கள் மூவரும் படை எடுத்து வருவதாகவும், உடனடியாக, அவர் தன் தோல்வியை ஒப்புக் கொள்ள வேண்டும் என்றும், அந்த மடல் கூறிற்று.

மடலைக் கொண்டு வந்த தூதுவன், கையைக் கட்டிக்கொண்டு, பாரியைப் பார்த்துக் கொண்டு நின்றான்! அவனும் முன்னாலே பாரியிடம் ஏதாவது பெற்றானோ என்னவோ !

அவனுடைய கண்கள் கண்ணீரைச் சிந்தி இந்த மலையின் மீதா படையெடுப்பு? இந்த மலை யாருக்கு என்ன பாவம் செய்தது? எதுவும் செய்யவில்லையே! வாரி வாரிக் கொடுத்ததைத் தவிர வேறு எதுவும் செய்யாத, எந்தப் பாவத்தையும் அறியாத, இந்த உன்னத மலைக்கு, இந்தப் போரா ? யுத்தகளமா ? இரத்தக் களறியா ? என்றெல்லாம் மன்னவன் எண்ணுவதற்கு முன்னாலேயே எண்ணியவன், மடல் கொண்டு வந்த தூதுவன்.

மடலைச் சற்று உரக்கப் படித்தான் மாமன்னன் பாரி ! கேட்டுக் கொண்டிருந்தான், வானவரையன்.

"படையெடுப்பா ? நம் மீதா ? நல்லது மன்னவா. வெகு நாட்களாகத் தூங்கிக் கிடந்த வேலுக்கு, வேலை வரவேண்டும் என்பது மூவேந்தரின் விருப்பம்போலும். வேல் தாங்கிய, வாள் தாங்கிய வீரர்கள் நம்முடைய வீரர்கள். அவர்கள்



என்றும் எதற்கும் அஞ்சியது இல்லை. மரணமே வருவது ஆயினும் மானத்தை விட்டுவிடச் சம்மதிக்க மாட்டார்கள், மலை வாழ் மக்கள்.

"பாரியுடைய பறம்பு மலை, அள்ளிக் கொடுத்த மலை ! அனைவரையும் அணைத்த மலை ! வெள்ளம் போல் வந்தவர்களுக்கு விருந்து வைத்து மகிழ்ந்த மலை ! உள்ளம் கனிய, உதடு சிரிக்க கள்ளம் கபடமின்றி, உலகத்தை வரவேற்ற மலை !

"இந்த மலைக்கு ஒரு கேடு என்றால், இந்த மலை நாட்டு தேவதை அவர்களைக் கவனித்துக் கொள்வாள். அந்த தேவதையுடைய தலைமையிலே தான், நாம் அந்தப் படைகளைச் சந்திக்கின்றோம். தளபதி சிறியவன் தான். வானவரையன் மிகச் சாதாரணமானவன் தான் ! ஆனால், வருகின்ற படை எவ்வளவு பெரியதாயினும் அங்கே, அவனுடைய சடலம் ஊர்வலம் போகுமே தவிர அவனுடைய சடலத்தைக் காணாமல் அந்தப் படை இந்த மலையின் மீது ஏற முடியாது" என்று சூளுரைத்தான்.

"அறிவேன், வானவரையா ! ஆனால் நான் யாருக்கும் பகையாக இருந்தது இல்லை ! யாரையும் கெடுத்தது இல்லை ! எந்த நாடும் அழிய வேண்டும் என்று விரும்பியதில்லை ! இந்தப் போர் வந்தே தீருமானால், அதைச் சந்திக்க வேண்டியவர்களிலே முதலானவன் நான்தான்.

"நீ இதுவரையில் ஓய்வு எடுத்தது போதும். நம்முடைய படைகளைத் திரட்டு, அவரவர் குடும்பத்தாரிடையே சொல்லி விட்டு, மலையை விட்டு கீழ்

இறங்கு. அனைவரும் மலையைச் சுற்றிலும் நிற்கு மாறு ஆணை இடு" என்றார் பாரி மன்னர்.

தளபதி தலை தாழ்ந்து வணங்கிச் சென்ற பிறகு, கலங்கினார் பாரி. கடன் பட்டோர் நெஞ்சம் போலக் கலங்கினான். தோற்றுப் போவோமோ என்ற கவலையால் அல்ல, கெடுதல் எதுவும் செய்யா மல் நல்லதையே செய்து கொண்டிருக்கும் ஒருவனுக் குக் கூட இந்த இடையூறுகள் வந்துதான் தீரும் என்றால் மக்கள் நல்லது செய்வதற்கே அஞ்சுவார் களே என்றே அவர் சிந்தித்தார். மூன்று பேருக்கும் ஒரே நேரத்தில் நாம் என்ன தீங்கு செய்தோம் ?

சரி, நீண்ட காலம் ஒருவன் உன்னதமான புகழில் வாழ்ந்து கொண்டிருப்பானானால், அவனுடைய முடிவு இப்படித்தான் வரும் என்று அவரும் முடிவு கட்டினார்.

கை தட்டினார். அங்கவையும் சங்கவையும் வந்தார்கள்.

"அம்மா ! மலையின் மீது போர் வருகிறது. மூவேந்தரும் போர் தொடுத்து இருக்கிறார்கள். நான் உங்களைக் கபிலர் மகா முனியிடம் ஒப்படைக் கிறேன்.

"போரின் முடிவு நன்றாக இருக்குமானால், நீங்கள் இந்த மலைக்கு திரும்பி வரலாம். இல்லை, அது தவறாக இருக்குமானால், நீங்கள் அவருட னேயே வாழுங்கள். அவர் எப்படி ஆணையிடு கிறாரோ, அப்படியே நீங்கள் நடந்து கொள்ள வேண்டும்" என்றார் பாரி.



கலக்கத்தோடு "அப்பா" என்றாள் அங்கவை.

"இதிலே பேசுவதற்கு என்னம்மா இருக்கிறது ? இதுதான் நடந்து தீரப் போகிறது என்று முடிவான பிறகு அடுத்து என்ன நடக்க வேண்டும் என்று தீர்மானித்து ஒரு முடிவு கட்டுவதுதான் அறிவாளி களுடைய வேலையாகும். அதைத்தான் நானும் செய்கிறேன்.

"கபிலரோடு உங்களை மலையை விட்டுக் கீழே இப்போதே அனுப்புகிறேன். பகைவர்களுடைய படை மலையை முற்றுகை இடுவதற்கு முன்பே நீங்கள் போய்விடுவதுதான் உங்களுடைய மானத் திற்கும், இந்த மலையுடைய மரியாதைக்கும் உகந்தது ஆகும்" என்றார் பாரி.

"இல்லை அப்பா, உங்களுக்கு ஏதேனும் ஒரு முடிவு என்றால் அதை நாங்களும் ஏற்றுக் கொள் கிறோம்" என்றாள் சங்கவை.

"இவையெல்லாம் எந்த நல்ல மக்களும் பேசக் கூடிய விஷயங்கள்தான். ஆனால், இப்படிப் பேசுவ தால் மட்டுமே நீங்கள் அதைச் செய்துவிட வேண்டும் என்று நான் விரும்ப மாட்டேன்.

"பாரியுடைய குலம் வாழ்கிறது என்று சொல் வதற்கு இரண்டு பெண் மக்கள்தான் இருக்கிறார்கள். அவர்களை ஓர் இல்லத்தில் சேர்த்து, கபில மகாமுனி ஒரு விளக்கு ஏற்றி வைப்பாரானால் பாரியுடைய வம்சம் தழைத்தோங்கி நிற்கும். பாரியுடைய முடிவு

எப்படி நேருமானாலும், அவன் பேரைச் சொல்வதற்கு பெண்கள் வம்சமாவது இருக்கட்டுமே! நீங்கள் தயாராகுங்கள்! கபில முனியை அழைத்து நான் பேசுகிறேன்" என்றார் பாரி.

கண்ணீரோடு அவர்கள் தங்களுடைய 'உடமைகளை எடுக்கப் புறப்பட்டார்கள்.

அழைப்பின் பேரில் கபில மகாமுனி உள்ளே வந்தார்.

"கபிலரே! எல்லாச் செய்திகளும் உங்களுக்குத் தெரியும். இது பொறாமையால் வந்த படையெடுப்புத் தான் என்றாலும், இதனைத் தாங்கித் தீரவேண்டியவனே நான். இந்தப் படையெடுப்புக்கு அஞ்சி நான் மலையை விட்டுக் கீழே இறங்கி ஓட முடியாது. படையெடுப்பு வந்து விட்டதே என்பதற்காக தூது விட்டு சரண் அடையவும் முடியாது. ஆகவே, நான் அடுத்து நடக்க வேண்டிய காரியத்தை உங்களிடம் ஒப்படைக்கிறேன்.

"போரின் முடிவு எதுவாயினும், என் பெண் மக்களின் எதிர்காலம் உங்கள் கையில். அந்த இரண்டு பேர்தான் என் வாழ்க்கையில் நீக்க முடியாத பந்தங்கள்! அவர்களைக் கண் போல் காத்து வந்து, எந்தக் காலத்தில் எது செய்ய வேண்டுமோ அதனைச் செய்து கொடுத்து, அவர்களுடைய எதிர் காலத்தை கவனித்துக் கொள்ள வேண்டியது உங்கள் பொறுப்பு" என்றார் பாரி.



மூவேந்தர்கள் ஏன் படையெடுக்கிறார்கள் என்றெல்லாம் கபிலமுனி கேள்வி தொடுக்கவில்லை. அவர் அறிவார், என்றேனும் இது நடக்கப் போகிறது என்று.

ஏனென்றால், சேரனையும் பாண்டியனையும் பார்த்து அவரும் இதே பாடலைப் பாடி இருக்கிறார். ஔவையும் இதே பாடலைப் பாடியிருக்கிறார் பாரியைப் பற்றிப் பாடாத புலவனே இல்லை அல்லவா! என்றேனும் ஒருநாள் இம்மூவேந்தரும் இந்த முடிவுக்கு வருவார்கள் என்று எண்ணியிருந்தவர் அல்லவா கபில மகாமுனி!

"நல்லது பாரி, நீ கலங்காதே! மரணமே வருமானாலும், மகத்தான பெரும் புகழை பாரிக்கு ஈட்டித் தரும். உன் மக்களைக் காப்பாற்ற வேண்டியது என் கடமை" எனச் சொல்லி, அப்பொழுதே, தங்களுடைய உடமையோடு வந்த அங்கவையையும், சங்கவையையும் கைத்தாங்கலாகப் பற்றிக் கொண்டார்.

"அப்பா!" என்று கதறினாள் அங்கவை.

பாரி கலங்கவில்லை. கண்ணீர் வடிக்கவில்லை.

"மகளே, நீங்கள் வாழ்கிறீர்கள் என்ற எண்ணம் ஒன்றே எனக்குப் போதும். என்னுடைய மரணம் நிச்சயிக்கப்பட்டுவிட்டது. மூவேந்தரையும் நான் வென்றுவிடுவேன் என்று, வீரம் பேசுவது சுலபம். ஆனால், வெல்லக்கூடிய நிலையிலே, அவர்களுடைய படைபலம் தளர்ந்ததும் இல்லை. நம்முடைய படைபலம் வளர்ந்ததும் இல்லை. ஒரு

மலை எவ்வளவுக்குத் தாங்குமோ அவ்வளவுக்குத் தான், படையை நான் வைத்திருக்கிறேன். மூவேந் தரும் கடல் அலைபோல் வைத்திருக்கிறார்கள். எதிரி யுடைய பலத்தைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது, இது இறுதிப் போர் என்று எனக்கு நன்றாகத் தெரிகிறது. நீங்கள் அமைதியாக இருங்கள். முனிவரிடம் அன்பாக இருங்கள். இனி நாங்கள் ஏழையாகவே வாழவேண்டியிருக்குமோ என்று கண்ணீர் வடிக் காதீர்கள். எப்படியும் நீங்கள் வாழ்வதற்கு ஒரு வழி, நான் உங்களுக்குச் சொல்லியே வந்திருக்கிறேன். ஏனென்றால், எந்த நாளிலேயும் யாருக்கும் எந்த முடிவும் வரலாம் என்பதனை நானும் அறிந்து இருக்கிறேன், உங்களுக்கும் கற்றுக் கொடுத்தேன். ஆ ! புறப்படு ! ஆ ! புறப்படு !" என்றார், பாரி.

நின்று கொண்டேயிருந்தார்கள், அங்கவையும் சங்கவையும். "படை வரும் முன்பே புறப்படுங்கள்" என்றார், பாரி.

அவர்கள் விடைபெற்று வெளியே சென்றபோது பாரியுடைய இதயம் வெடித்துப் பூமியிலே வந்து விழுந்ததுபோல் இருந்தது. அதைத் தேடுகிறவர் போல பூமியையே பார்த்து முன்னும் பின்னுமாக அவர் நடக்கத் தலைப்பட்டார்.

இங்கே பாரி நடந்துகொண்டிருந்தபோது அங்கே வேங்கை போல சீறிக் கொண்டிருந்தாள் கதலி. கணவரிடம் இருந்து செய்தியை அறிந்து, "அப்படியா, படை வருகிறதா? மூவேந்தர் படையா?



என் அண்ணன் தளபதியா, நன்று ! நன்று ! அவர் கள் வரட்டும் இங்கே. பாரி படை தோற்றுப் போகு மானாலும், அண்ணன் களத்திலே எப்படி இருக் கிறார் ? ஆடவராக நின்று தன் மைத்துனனை எப்படிச் சந்திக்கிறார் ? அள்ளி அள்ளிக் கொடுத்த பாரியை, அவர் கொல்லுவதற்கு, எப்படித் துணி கிறார் ? என்பதை நான் பார்க்கிறேன். அந்த மூவேந்தருடைய விற்கொடியும், புலிக்கொடியும் மீன் கொடியும் இந்த மலையின் மீது பறந்து மாமன்னர் பாரியை நாங்கள் கொன்றுவிட்டோம் என்று சொல்லுமானால், அவர்கள் உலகத்தின் பழி பாவங் கள் முழுவதற்கும் ஆளாவார்கள். எனக்குத் தெரியும், வரட்டும் இங்கே !" என்று முழங்கினாள், கதலி.

அவள் போட்ட ஓசையில் எங்கே அவள் இதயம் வெடித்து விடுமோ என்று பயந்தான் வானவரையன்.

"கதலி, சற்று மெதுவாகப் பேசு. உனக்கு உடல் நிலை சரியில்லை. சற்று மெதுவாகப் பேசு" என்று எவ்வளவோ கேட்டுக் கொண்டான்.

"இனி உடலைப் பற்றி என்ன கவலை ? இனி மானத்தைப் பற்றியே கவலை. என் மானம், உங்கள் மானம் அல்ல. இந்தப் பறம்பு மலையின் மானம். இது என் தாய் வீடு, என் தாய் பாரி. இதைக் காப் பாற்ற வேண்டியது என் கடமை. நானும், நீங்களும் இது வரையிலே வாழ்ந்த வாழ்க்கை, உலகத்தில் உள்ள தெய்வங்கள் கூட வாழ்ந்து இருக்க முடியாது. அந்த அற்புதமான வாழ்க்கையை நான் வாழ்ந்து

முடித்துவிட்டேன். இனி நான் காண வேண்டியது, உலகம் புகழக் கூடிய மரபா ? மானத்தில் ஒருவனை உலகம் புகழுமானால், அவர் வாழ்ந்ததே நியாய மாகிவிடும் ! தைரியமாக இருங்கள் !" என்று அவனை தைரியப்படுத்தினாள் கதலி.

அவன் சிரித்தான்.

"மரணத்தைப் பற்றித் தெரிந்து கொண்டு தானே, ஒருவன் தளபதி ஆக முடியும். கதலி, நான் கவலைப்படவில்லை. உன் அண்ணனைப் போர்க் களத்தில் சந்திக்கும்போது, மைத்துனனாக சந்திக்க மாட்டேன். ஒரு நாட்டினுடைய தளபதியாக நான் நின்று, இன்னொரு நாட்டின் தளபதியை வரவேற் பது போல், வரவேற்பேன்" என்றான்.

"நன்று ! அப்படிச் சொல்லுங்கள். அடுத்து என்ன செய்ய வேண்டும். அதை நான் செய்வேன், இந்த மலை நாட்டின் தளபதி நீங்கள் மட்டுமல்ல. இனி நானும் தான்" என்று கதறினாள்.

"கதலி !" அவனுடைய குரல் ஓசை, அந்த மலை இனம் முழுவதையும் எதிரொலித்தது ! அந்த ஓசைக்கு மேலே மற்றொரு ஓசையும் கேட்டது.

அதுதான் மூவேந்தருடைய படை வரும் ஓசை !

# 9

கழுத்து நிறைய சங்கு மாலைகள் ! காதிலும் சங்குத்தோடு ! சுருட்டிவிடப்பட்ட கூந்தல் ; மார்புக் குக் கச்சை. கீழே ஒரு சிறிய ஆடை— இவற்றோடு இருந்த பாரியுடைய மகளிர், பாரிமலைப் பெண்டிர் அனைவரும் கையில் வேல் ஏந்தி நின்றார்கள்.

"மடிவதாயின் அனைவரும் மடிவோம் ; வாழ்வ தாயின் அனைவரும் வாழ்வோம் ; என்பதே அவர் களது குரலாக இருந்தது.

பதினாறு ஆண்டுகள் கூட செல்லாத இளம் பருவப் பிஞ்சுகள் எல்லாம் கையில் வேலேந்தி நின்ற காட்சி, பாரியை மெய்சிலிர்க்க வைத்தது.

"உங்களை நான் வளர்த்தது இந்தக் களத்தில் மடிய வைக்கத்தானா ?" என்று அவர் கேட்டார்.

"மடிவதாயின் அனைவரும் மடிவோம் ; பாரி யுடைய பறம்பு பாலையாகக் கிடக்கும்போது, அந்த பாலைவனத்தின் மீது மூவேந்தர் படை வரட்டும்" என்று அவர்கள் முழங்கினார்கள்.

அத்தனை பேரையும் பார்த்தபடியே பாரி மன்னன் மலையின் உச்சியில் நின்று, அடிப் பரப்பைப் பார்த்தார். அடிப்பரப்பிலே அவரது படையும் இருக்கிறது. அவர்கள் அணிவகுத்து நின்று கொண்டிருந்தார்கள். மூவேந்தர் படை வருவது

கண்ணுக்குத் தெரிந்தது. அந்தப் படை மலையின் அடிவாரத்தில் வந்து சேரும்போது, அதனுடைய கடைசிப் பகுதி, மதுரையிலே இருக்கும் என்கின்ற அளவுக்கு மிகப் பிரமாண்டமானதாக இருந்தது. அவ்வளவு மாபெரும் படையைச் சந்தித்தும் கூட, ஒரு முடிவுக்கு வந்து விட்டவர்கள், அந்த முடிவின் மீதே கண்ணாக இருப்பார்களே தவிர, அதன் மீது புதிய கேள்விக் குறிகளைப் போட மாட்டார்கள். அப்படித்தான் பாரி இருந்தார்.

மலையை நோக்கிப் படைகள் வந்தன.

பாரியின் படை அவற்றை எதிர்கொண்டு வியூகம் வகுத்து நின்றது.

"என்ன ? உங்கள் மன்னர் சரண் அடைந்து விட்டாரா ? இல்லையா ?" என்பது போல பாதையில் மூவேந்தரின் தளபதி செங்கணான் தேர் நேரே வந்து நின்றது, நின்று கொண்டு இருந்த வானவரையனின் தேருக்கு எதிரே.

"கேள்வி கேட்க வந்திருக்கிறீர்களா மைத்துனரே ?" என்று கேட்டான், வானவரையன்.

"இல்லை ; மைத்துனர் எப்படி இருக்கிறார் என்று பார்த்துப் போக வந்தேன்" என்றான் செங்கணான்.

"மலைநாட்டுக்கு விசுவாசமாக, பிறந்த தாயகத்துக்கு உறுதியாக, நெஞ்சிலே வஞ்சமில்லாமல் கள்ளம் கபடம் இல்லாமல், பிறர் மலையை அபகரிக்காமல், உள்ளத்தில் உயர்ந்தவனாக இருந்து



கொண்டிருக்கிறாரே, உங்கள் மைத்துனர், நீங்கள் எப்படி ?" என்று கேட்டான் வானவரையன்.

"முடிவு தெரிந்துமா ?" என்று சிரித்தான் செங்கணான்.

"தெரிந்துதானே களத்திற்கு வந்து இருக்கிறேன்" என்றான் வானவரையன்.

"முடிவு தெரியும் அல்லவா ?" என்று கேட்டான் செங்கணான்.

"ஆம் !" என்று கம்பீரமாகச் சிரித்தான் வானவரையன்.

"நான் கலங்குகிறேன், என் தங்கையின் வாழ்வு கருதி" என்றான் செங்கணான்.

"அவள் கலங்குவது, மலை நாட்டின் மலையவேள் பாரியின் வாழ்வு பற்றி" என்று சிரித்தான், வானவரையன்.

"இருவரும் என்ன பேசிக் கொள்கிறார்கள்" என்ற தூரத்தே நின்ற சோழனுக்குத் தோன்றிற்றோ என்னவோ ! "ம்" என்று சங்கு முழங்கினான்.

செங்கணான் வில்லை எடுத்தான்.

தானும் வில்லை எடுத்தான், வானவரையன்.

இருவருடைய கணைகளும் மாறி மாறிப் பறந்தன ! வானவரையனது கணை நேராகவே சென்றது. நேரிய மலைநாட்டு மகன் அல்லவா. நேருக்கு நேராகவே சென்றது ! கீழேயும் மேலேயுமாகச் சென்றது செங்கணானுடைய கணை. கடைசி

யாக ஒன்று, வானவரையனுடைய கழுத்திலே பாய்ந்தது.

"கதலி" என்ற வார்த்தையும், "மன்னா" என்ற வார்த்தையும் வெளிவந்தன.

அப்படியும் ஒரு கணையை மீண்டும் செலுத்தினான். அடுத்த கணை அவன் மார்பில் புகுந்தது. புகுந்து வெளியிலே வந்தது. மார்பில் தான் புகுந்தது கணை என்ற மனமகிழ்ச்சியோடு, அவன் தேரிலே இருந்து கீழே விழுந்தான்.

தேரிலே இருந்து அவன் கீழே விழுவதைப் பார்த்த படைகள் அத்தனையும் வெகுவேகமாக களத்திற்குள் புகுந்து போராட ஆரம்பித்தன! மூவேந்தர் படைகளோடு மோதின. மூவேந்தர் படைகள் மிகக் கடுமையாக எதிர்த்தன.

அளவிலே பெரியதாக இருந்தாலும், உள்ளத்து உறுதியிலே பெரியதாக இருந்த பாரியின் வீரர்களை சந்திப்பதில் அவர்களுக்கு கடினமாகத்தான் இருந்தது. கடுமையான போராட்டத்திற்குப் பிறகு, இரவு வந்து விட்டது என்று அவர்கள் அமைதி கொண்டார்கள்.

அந்த இரவிலே, அவர்களுடைய சடலங்களை அவரவர்கள் எடுத்துப் போகலாம் என்ற போர் நியதிப்படி, மலையில் இருந்து நூற்றுக்கணக்கான வண்டிகள் கீழே இறங்கி வந்தன. அந்த வண்டிகள் ஒவ்வொன்றும் ஆங்காங்கே நிறுத்தப்பட்டு, சடலங்களுக்கு இடையே தங்களுடைய உறவினர்களைத்



தேடினர், வண்டியிலே வந்தவர்கள். தேடிய உறவினர்களில் வானவரையனது சடலம் ஒன்று.

அந்த சடலத்தை ஏற்றிக்கொண்டு முதல் வண்டி பறந்தது. அந்த வண்டி மலையின் மீது ஏறிப்போகும் போது, அதை வரவேற்க கதலி தயாராக இருந்தாள்.

"ஐயோ! என் உயிரே, நீங்கள் மறைந்து விட்டீர்களா?" என்றெல்லாம் அவள் புலம்பவில்லை. அவள் தன்னுடைய கணவனை எதிர் பார்த்தா அங்கு நின்றாள்? இல்லை. ஒரு சடலம் வரும். எவ்வளவு விரைவில் அது வருகிறதோ, அவ்வளவு விரைவில் தான் அடுத்த வேலையைப் பார்க்கலாம் என அவள் கருதினாள்.

அந்த சடலம், உள்ளே கொண்டு வந்து வைக்கப் பட்டது. அதன் மீது மலர் மாலைகள் சாத்தி, திரும்பிப் பார்த்தாள்.

பாரி மன்னர் நின்றார்! அப்படியே ஓடிவந்து சடலத்தைக் கட்டித் தழுவிக் கொண்டார்.

"கதலி, உன் மங்கலத்தை நீ இழந்ததற்கு, நான்தானே காரணம்" என்றார்.

"இல்லை, மன்னவா...என் மங்கலம், இன்னும் பலரது மங்கலம் பறிக்கப்பட்டதற்கு மூவேந்தரே காரணம், என்றும் மாறா பழி சுமக்கப் போகிறார்கள், இந்த மூவேந்தர்கள். உலகின் புகழ் சூழ்ந்த மூவேந்தர்கள், பழி சுமந்தது இந்த ஒன்றிலேதான் என்ற வரலாறு நடக்கப் போகிறது. இந்த மரணத்தில் நான்

அஞ்சி விடவில்லை! ஏனென்றால், இந்த மரணத் தைத் தொடர்ந்து நாங்கள் வாழப் போகிறோம் என்று இருந்தால்தானே?'' என்றாள்.

"என்ன செய்யப் போகிறாய் கதலி" என்று கேட்டார் பாரி.

"ஒன்றுமில்லை" என்று தன் மகனை அழைத் தாள்! வாரி முடித்தாள். பொட்டு வைத்தாள். நகைகள் அணிவித்தாள். கையிலே வேலைக் கொடுத்தாள்! "ஏறி உட்கார், பொழுது விடியும் வரை அதிலே இரு. பொழுது விடிந்தவுடன் முதல் தேர் உன்னுடையதாக இருக்க வேண்டும்."

"ஐயகோ! இந்த இளம் பிஞ்சையா நீ அனுப்பப் போகிறாய்?" என்று கெஞ்சினார் பாரி.

"தந்தை இறந்து போனால், அடுத்து போக வேண்டியவன் மகனே! அந்த மகன் இல்லை யென்றால், தாய்'' என்றாள் அவள்.

"இல்லை அம்மா! நான் போகிறேன் களத் திற்கு, இவன் உன் குலவிளக்காக நின்று என்றும் ஒளி வீசட்டும்" என்றார் பாரி மன்னர்.

"மன்னா! கணவன் இறந்து, மலையின் முடியும் முடிந்து— நீங்களும் அழிந்த பிற்பாடு எனக்கு என்ன குலம்? அதற்கு எதற்கு விளக்கு?'' என்றாள் அவள்.

அவள் பேசப் பேச, பாரி அவள் கால் களிலேயே விழுந்து விடுவார் போல் இருந்தது.



தாயகத்தின் மீதும், தன் மீதும் இவ்வளவு அன்பு செலுத்தும் ஒருத்தியை, அவர் பார்த்த படியே நின்று கொண்டிருந்தார்.

"மகளே! நான் பெற்ற மக்களைவிட, நீயே பெருமகள்; நீயே தலைமகள்; நீயே என் குலமகள். பாரி மலையில் பறக்கும் கொடி தலைசாய்ந்து விட்டாலும், பாரி மலையில் பறந்த இந்தக் கொடி யின் புகழும் பெயரும் என்றும் நிலைத்து இருக்கும். உனக்கு நான் என்ன செய்யப் போகிறேன்?" என்றார்.

"ஏதும் வேண்டாம் மன்னவா! உங்களுடைய முடிவு நேராமல், இந்த மலையைக் காப்பாற்ற கடைசியாக ஏதேனும் ஒரு வழியிருக்குமா என்று தான் யோசிக்கிறேன். அது சரணாகதி அல்ல! தூது விடுவதும் அல்ல. போர்க்களத்திலே எல்லாப் பெண்களையும் கொண்டு நிறுத்தி, முந்நூறு கிரா மத்து மக்களையும் கொண்டு வந்து நிறுத்தி, 'இவ் வளவு பேரும் அழிந்த பிற்பாடுமா இங்கே நீங்கள் ஆளப்போகிறீர்கள்?' என்று யாராவது ஒரு புலவர் சொன்னால், மன்னர்களது காதில் ஏறாதா என்று பார்க்கிறேன்" என்றாள் அவள்.

பாரி மன்னர் சிரித்தார்.

"அவ்வளவையும் கேட்ட பின்னால்தான் அவர் கள் வந்திருக்கிறார்கள்" என்றார் பாரி மன்னர்.

"இல்லை, எனக்கு இருந்த சிறிய ஆசைதான் அது. அந்த ஆசையை வெளிப்படுத்தி, அடுத்து

ஒருவரைக் கவனிக்கத் தயாராக இருக்கிறேன். மன்னா ! உங்களை இழக்கப் போகிறேனே என்பது தான் எனக்குக் கவலையே தவிர, என் குலம் அழியப் போகிறதே என்பது அல்ல என் கவலை" என்றாள் அவள்.

"இல்லை அம்மா ! நாளைப் போருக்கு நானே போகிறேன்" என்றார் பாரி.

"இல்லை, என் மகன் போவான், பின்னாலே நானும் போவேன். அதன் பிறகுதான் நீங்கள் போக வேண்டும்" என்றாள் அவள்.

பாரி மன்னர் அவளிடம் விடைபெற விரும்ப வில்லை. விடைபெற்றால், அவளை மரணத்திற்கு அனுப்புவதாக அல்லவா முடியும். அங்கிருந்து வெளியே நடந்தார். குளிர்ந்த அந்த மலையின் காற்று இப்போது கொதித்தது

"நன்மை செய்தார்க்கு எல்லாம் இதே முடிவா? நல்லவர்க்கு எல்லாம் இதுதான் முடிவா ?" என்று யாரோ, எங்கேயோ கேட்பது அவர் காதில் விழுந்தது.

மன்னர் மாளிகைக்குள் நுழைந்தார். உலாவிக் கொண்டே இருந்தார். மறுநாள் பொழுது விடியும் வரை, அவர் உலாவிக் கொண்டே இருந்தார்.

அதிகாலையில், நேரே, கதலியின் வீட்டிற்கு மீண்டும் வந்தார்.



தேரிலே உட்கார்ந்து இருந்த சிறுவன் புறப்படும் போது, கீழே இறங்கி, மன்னரது காலில் விழுந்து, வணங்கி, வேலையும், வில்லையும், கணையையும் அவரிடம் கொடுத்து, திரும்பப் பெற்றுக் கொண்டு, "போகிறேன் மன்னவா !' என்று விடைபெற்றான்.

அவன் விடைபெறும்போது, "ம் ! போய் வா !" என்றார் கம்பீரமாக.

அப்போது அவள் அழவில்லை. பாரியும் கலங்க வில்லை.

மலையின் அணில்கூட மூவேந்தரை எதிர்த்துப் போராடும் என்பதை அவர் கண்டார்.

"இனி என்ன? ஆனந்தமாக மரணத்தைத் தழுவலாம்" என்பதுபோல அவருக்குத் தோன்றிற்று.

மகன் போவதைப் பார்த்துக் கொண்டேயிருந்து, பிறகு வீட்டிற்குள்ளே வந்தாள் கதலி.

அந்த வீட்டின் வாசலை மெதுவாகத் தொட்டு வணங்கிவிட்டு, திரும்பி நடந்தார் பாரி.

அடுத்து பாரியின் படைக்கு யார் தலைமை தாங்கி வருகிறார் என்று தூரத்தில் நின்று பார்த்த படியே நின்றான் செங்கணான்.

தேர் வருவதும், தேருக்குப் பின்னால் புரவிகள் வருவதும் அவன் கண்ணுக்குத் தெரிந்தது.

யாரது தேரில் என்று கூர்ந்து பார்த்தான். தேர் அவனை நெருங்கியபோதுதான் ஏழு வயதுச் சிறுவன் அதிலே அமர்ந்து இருப்பது தெரிந்தது. இவனா! இவனா தளபதி, என்று அவனுக்கு சிரிப்பு, திகைப்பு, கவலை, கண்ணீர் என்று ஒன்பது சுதிகளும் ஒன்று கூடிவந்தன.

"தம்பி! நீயா வந்திருக்கிறாய்?" என்று கேட்டான் அவன்.

"வேறு யார் வருவார்கள்? நான் தான் வந்திருக்கிறேன்" என்றான் இளஞ் சிறுவன்.

"உன் தந்தையே மடிந்த இடத்தில் நீயா வெல்லப் போகிறாய்?" என்று கேட்டான் செங்கணான்.

"பல நேரங்களில் சிறு அணில் செய்கின்ற காரியத்தை பெரிய யானைகள் செய்ய முடியாது" என்றான் சிறுவன்.

இவ்வளவு அழகாகப் பேசுகிறாயே, பால் மணம் மாறாத இந்தப் பருவத்தில், படுகளத்தில் நீ மடிந்து தான் தீரவேண்டுமா? உன் தாய்க்கும் இதுதான் விருப்பமா?" என்று கேட்டான் செங்கணான்.

"ஆம்! இந்த மலைக்காக, இந்த மலையினுடைய மானத்திற்காக, எங்கள் மாமன்னர் பாரிக்காக, அள்ளி அள்ளிக் கொடுத்து சிவந்து போன அவர் கைகளுக்காக, நானல்ல என்னை விடச் சிறிய மழலைகூட உங்களை எதிர்த்துப் போராடும்" என்றான்.



"இல்லை, தம்பி. நீ போய்விடு. ஏதோ தவறாக உன்னை இங்கே அனுப்பிவிட்டார்கள்" என்றான் செங்கணான்.

சிரித்தான் சிறுவன். "பெரிய மனிதர்கள் கூட விவரம் தெரியாமல் பேசுகிறார்கள் என்பதை இப்போதுதான் நான் கண்டேன். இவ்வளவு திட்டவட்டமாகவும் தெளிவாகவும், தேரில் ஏறி, படைவீரர்கள் புடைசூழ இங்கே நான் வந்திருக்கிறேன். யாரோ தெரியாமல் அனுப்பி விட்டிருப்பதாக கதை சொல்கிறீர்கள். எடுங்கள் வில்லை, விடுங்கள் கணையை" என்றான் இளஞ் சிறுவன்.

தூரத்தில் இவர்களது உரையாடலைக் கவனித்துக்கொண்டு இருந்த சேர மன்னன், மெதுவாக சோழ மன்னனிடம் போய், "இவன் என்ன குலமுறை காட்டுகிறானா உங்களது தளபதி?" என்று கேட்டார்.

"இல்லை, என்னதான் குலமுறை கிளம்பினாலும், அவன், நடத்த வேண்டிய காரியத்தை நடத்தியே தீருவான்" என்றான் சோழ மன்னன்.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே, இங்கே கணைகள் பறந்தன. பறந்த கணையில் மூன்றாவது கணையே, அந்த இளம் பிஞ்சு, இளஞ் சிறுவனின் உயிரைக் குடித்தது.

"அம்மா! மன்னா!" என்ற குரலோடு அந்த இளஞ் சிறுவன் களத்திலே விழுந்தான்.

"தம்பீ" என்று கதறினான் செங்கணான்.

அவனைத் தம்பி என்று அழைப்பதா? மருமகன் என்று அழைப்பதா? எதுவுமே புரியவில்லை செங்கணானுக்கு. அவனோடு சமமான தளபதியாக அல்லவா மாண்டிருக்கிறான்.

கண்ணீரை அவனால் அடக்க முடியவில்லை. 'தனக்கு மருமகனாக வரவேண்டியவன், இளம் பிஞ்சு, தன்னாலே கொல்லப்பட்டு விட்டதே' என்று களத்திலேயே அவன் கண்ணீர் வடித்துவிட்டான். அதை மன்னர்கள் காணாமல் இருக்க மறைத்துக் கொண்டான்.

அப்படியே அந்த சடலத்தைத் தாங்கிய, ரதம் பட்டப் பகலிலேயே மலையின்மீது ஏறிச் சென்று கொண்டு இருந்தது! நூறு வீரர்கள் தொடர்ந்து சென்றார்கள். ஓ! தளபதி திரும்பிப் போகிறார்! படைகள் ஓடுகின்றன! தோற்றுவிட்டன! என்று மூவேந்தர்களும் கொக்கரித்தார்கள்.

அந்த ரதம் நேரே ஓடிப்போய் அங்கே கதலி வீட்டு முன்னால் நின்றது.

இரவில் மட்டுமே மகனை எதிர்பார்த்த கதலி, இப்போது பகலிலேயே தன் மகனுடைய சடலம் வந்திருக்கிறது என்று, அதனை வாரி எடுத்து, சில பூக்களை அவன்மீது வைத்து போற்றிப் புகழ்ந்து, "மகனே! ஏழு வயதில் நாட்டுக்காக மாண்டவன் நீ ஒருவன் தான்" என்றாள்.

அந்த சடலத்தை வெளியிலே கொண்டுபோய் புதைக்க மனம் இல்லாமல் தன் வீட்டிலேயே புதைக்கப் போவதாகவும், அதன்மீது பாலை ஊற்றி



பாரி மலையுடைய கொடியை அதன் மீது போட்டு, அதற்கு மரியாதை செய்யப் போவதாகவும் அவள் தனக்குத் தானே பேசிக் கொண்டாள்.

"பாரிக்கு இந்தச் செய்தியை சொல்லாவிடில் மன்னவன் கலங்குவான்" என்று கூட வந்திருந்த வீரர்கள் எல்லாம் கூறினார்கள்.

கதலி அன்றைய பொழுதுக்கே தான் தளபதியாகப் போவதாக முடிவு கட்டி கவசங்களை எடுத்து அணிந்து கொண்டாள். வில்லை எடுத்தாள். வேலை எடுத்தாள். அனைத்தையும் கையிலே தாங்கித் தேரில் ஏறி அமர்ந்தாள். எதிர்ப்பட்டான் ஒரு சந்நியாசி. "அம்மா! தங்கள் கையில் உள்ள வாளையும், வேலையும் எனக்கு யாசகமாகத் தர வேண்டும். நீங்கள் வள்ளல் மலையைச் சேர்ந்தவர்கள், கேட்ட உடனேயே கொடுப்பவர்கள். அதைக் கொடுத்தால்தான் என் குழந்தை பிழைக்குமாம். அந்த வேலையும் வாளையும் தண்ணீரிலே நனைத்து அந்தத் தண்ணீரிலே ஏழு நாட்களுக்கு குளிப்பாட்டினால்தான், அந்தக் குழந்தை பிழைக்குமாம். மருத்துவர் சொல்கிறார். ஆகவே, அதைக் கொடுங்கள்" என்று கேட்கிறான்.

"போருக்குப் போகிற நேரத்தில், அந்த 'வாளை' கேட்க வந்திருக்கும் நீ யார்? கொடுக்க முடியாது என்று சொல்லவும் முடியாது இந்த மலையுடைய சட்டம் ஆயிற்றே! நான் கொடுத்தே தீர வேண்டியவள் ஆகவும் இருக்கிறேன். படை நடத்தி தீர வேண்டியவள் ஆகவும் இருக்கிறேன். நீ யார்?" என்று கேட்டாள் கதலி.

"இல்லை ! நான் ஒரு ஏழை ! என் மகன் சாகக் கிடக்கிறான். கொடுங்கள்" என்று கெஞ்சினான்.

கண்ணீரோடு வாளையும், வேலையும் அவன் கையிலே கொடுத்தாள், கதலி.

அதைக் கண்களில் ஒற்றிக் கொண்டான் வழிப் போக்கன். தன்னை மறைத்து வந்த அங்கியையும் தாடியையும் எடுத்தான்.

அங்கே, பாரி மன்னர் நின்றார்.

"மகளே ! மடிவதென்றால், உனக்கு முன்னாலே நான் மடிய வேண்டும். உன் சடலத்தைப் பார்த்த பிறகு நான் மறையக் கூடாது" என்றார்.

கதலி ஓடினாள் ! "மன்னா..." என்று கதறினாள்.

மாளிகைக்குள்ளே நுழைந்து, கவசங்களை அணிந்துகொண்ட உடனேயே, மூன்று சந்நியாசி கள் அவர் முன்னாலே எதிர்ப்பட்டார்கள்.

"மன்னன் வாழ்க ! மாமன்னன் வாழ்க ! பாரி மன்னன் வாழ்க !" என்றார்கள்.

"யார் நீங்கள்...?"

"நாங்கள் வெளியூரில் இருந்து வருகிறோம். நாங்கள் பரதேசிகள். எங்களுக்கு வாழ்க்கையில் எதுவுமே இல்லை."

"யாம் என்ன செய்ய வேண்டும் ?"

"எங்களை எதிரிகள் சூழ்ந்து வருகிறார்கள். அவர்களைக் கொன்று அழிப்பதற்கு, உன் கையிலே உள்ள வேலையும், வாளையும் எங்களுக்கு யாசக மாக கொடுக்க வேண்டும்" என்றார்கள்.



"இந்த நேரத்தில் வந்து என்னிடம் கேட்கின்றீர்களே ; நீங்கள் யார் என்று எனக்குத் தெரியவில்லையே ?"

"நாங்கள் யாருமல்ல, வேறு ஊர் சந்நியாசிகள், துறவிகள், உலகத்தைத் துறந்தவர்கள்" என்றார்கள் அவர்கள்.

பெரும் போராட்டத்திற்குப் பிறகு, அந்த வாளை யும், வேலையும், அவர்கள் கையிலே கொடுத்து விட்டு வேறு வாள் எடுப்பதற்கு உள்ளே திரும்பி னான் பாரி.

பின்னாலே இருந்து ஒரு வேல், அவன் மீது பாய்ந்தது.

எந்தவிதச் சத்தமும் இல்லாமல் திரும்பிப் பார்த்தார் பாரி.

"யார் நீங்கள் ?" என்றார் பாரி.

அவர்கள் சிரித்தார்கள்.

"நாங்கள் மூவேந்தர்கள். இந்த மலையின் மீது எங்கள் வாளாலேயே, எங்களாலேயே, நீ சாக வேண்டும் என்று இங்கே வந்தோம்" என்றார்கள்.

"ஐயோ ! நீங்களா ?" என்றார் பாரி.

"தோற்றுப்போனவனை பின்புறமாய் தாக்கு வது மூவேந்தருக்கு அழகா... ? தமிழ் மரபையே பாழாக்கிவிட்டீர்களே ! போர்க்களத்திற்கு புதிய இலக்கணம் வகுத்துவிட்டீர்களே ! ஐயோ......"

"உங்களை எல்லாம் வல்ல இறைவன் மன்னிப் பான். மன்னிப்பான்" என்று சொல்லிக் கொண்டே நிலத்தில் சாய்ந்தார் பாரி. "ஓ..."வென்று ஒரு சிரிப்புச் சத்தம் கேட்டது.

மலையின்மீது, ஒரு மகா காளி ருத்திர வடிவத்தில் அங்கேயும், இங்கேயும் அலைமோதி, "மாமன்னன் பாரி வாழ்க! மாமன்னன் பாரி வாழ்க!" என்று கூச்சலிட்டபடியே கீழே இறங்கி ஓடினாள்.

கீழே இறங்கி ஓடிய அந்த தேவதையைத் தொடர்ந்து ஊர்ப் பெண்கள் எல்லாம் ஓடினார்கள்.

அப்போதுதான், மூவேந்தர்களுடைய புரவிகள் அவர்களைக் கடந்தன. அத்தனைபேரும் அந்த புரவிகளுக்கு வழிவிட்டு, ஒரே வார்த்தைதான் சொன்னார்கள்! "நாங்கள் தான் பெண்களாகப் பிறந்தோம் என்று நினைத்தோம். மன்னியுங்கள்! எங்களை விட அற்புதமான பெண்கள் நீங்கள்."

மூவேந்தரும் தலைகுனிந்தபடியே, கீழே இறங்கினார்கள்.

பாரியின் பறம்பு மலை, பாலைவனமாகக் காட்சி அளித்தது!

ஓடிச்சென்ற பெண்மணிகள் அனைவரும் மாபெரிய குண்டம் ஒன்றினை ஏற்படுத்தி, விறகை அடுக்கி, நெருப்பைப் பற்றவைத்து, அதன் மீது ஒவ்வொருவராக விழுந்தார்கள்.

பாரிமலையில், யாரும் மிச்சம் இருக்கக் கூடாது என்று கடைசியாக விழுந்தவள், கதலி.

"கதலி" என்று கடைசியாக ஒரு குரல் கேட்டது.

அதுதான் வெற்றி முழக்கம் செய்ய வேண்டிய அவளுடைய அண்ணன் செங்கணானின் குரல்.

முடிந்தது.